# விடுதலைப்புலிகள்

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வமான ஏடு | குரல் 7 | மே 85 | அன்பளிப்பு ரூ. 2


## விடுதலைப் போர் - பல முனைகளில் தாக்குதல்

தமிழீழத்தில் புரட்சிகர ஆயுதப் போராட்டம் புதிய முனைப்போடு தீவிரமடைந்து வருகிறது. ஆயுதப் போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்து வரும் எமது விடுதலை வீரர்கள் சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளுக்கு எதிராக தொடர்ச்சியான தீர்க்கமான தாக்குதலை மேற்கொண்டு தேசிய விடுதலை யுத்தத்திற்கு ஒரு புதிய உத்வேகத்தை அளித்து வருகின்றனர். தமிழீழத்தின் பல்வேறு முனைகளிலும் கெரில்லாப் போராட்டத்தை விஸ்தரித்து தீவிரப்படுத்தி வரும் எமது விடுதலை இராணுவம் எதிரிப் படைகளுக்கு பெரும் உயிர்ச்சேதத்தை விளைவித்து வருகிறது. எமது விடுதலை வீரர்களின் வீரம் செறிந்த போர்ச் சாதனைகளால் சிங்கள இராணுவ இயந்திரம் ஆட்டம் காணத் தொடங்கியுள்ளது.

ஏப்ரல் மாத இறுதிப் பகுதியில் வடக்கின் பல பகுதிகளிலும் கிழக்கு மாகா[illegible] தமிழீழ விடுதலைப் புலிகளின் கெரில்லா அணிகள் மேற்கொண்ட திடீர்த் தா[illegible]தல்கள் காரணமாக [illegible]க்கும் மேற்பட்ட சிங்கள இராணுவப் படையினர் கொல்லப்பட்டனர். பெருந்தொகையானோர் படுகாயமடைந்தனர். இராணுவ வாகனங்கள் பல நாசமாக்கப்பட்டன.

### திருகோணமலை

26—4—85 எமது கெரில்லா வீரர்கள் திருகோணமலையில் நடத்திய தாக்குதல் ஒன்றில் 7 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இத்தாக்குதல் கட்டைபறிச்சான் என்னுமிடத்தில் மட்டக்களப்பு—மூதூர் வீதியில் நடைபெற்றது.

ரோந்தில் வந்து கொண்டிருந்த இராணுவ ஜீப் வண்டியொன்றை விடுதலைப் புலி கெரில்லாக்கள் கண்ணிவெடி வைத்து தகர்த்தெறிந்தனர். இத்தாக்குதலில் லெப்டினன்ட் அமாரியல் எனப்படும் இராணுவ அதிகாரியும் 6 இராணுவச் சிப்பாய்களும் கொல்லப்பட்டனர்.

### கரவெட்டி

28—4—85 எமது கெரில்லா வீரர்களுக்கும் சிங்கள இராணுவத்தினருக்கும் மத்தியில் கரவெட்டியில் நடைபெற்ற மோதலில் மொத்தம் 18 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

விடுதலைப் போராளிகளை வேட்டையாடும் நோக்கில் சிங்கள இராணுவப் படையொன்று 8 பாதுகாப்பு கவச வண்டிகளில் கரவெட்டிப் பகுதிக்குள் பிரவேசித்தது. இந்த இராணுவத் தொடர் வாகனங்கள் கரவெட்டியிலுள்ள வதிரி—நவிண்டில் வீதியை வந்தடைந்தபோது தயார் நிலையிலிருந்த எமது வீரர்கள் நிலக்கண்ணிகளை வெடிக்கப் பண்ணினர். நிலக்கண்ணி வெடிப்பில் ஒரு இராணுவ வாகனம் நாசமாக்கப்பட்டது. அவ்வாகனத்திலிருந்த 8 இராணுவச் சிப்பாய்கள் ஸ்தலத்திலேயே மாண்டனர். பல இராணுவத்தினர் படுகாயமடைந்தனர் இத்திடீர்க் குண்டு வெடித் தாக்குதலால் நிலை தடுமாறிய இராணுவத்தினர் பலர் வாகனங்களிலிருந்து குதித்து ஓடி வயல்களுக்குள் பதுங்கினர். எமது வீரர்கள் இவர்களைப் பின் தொடர்ந்து சென்று தாக்கியதில் 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். எமது வீரர்களுக்கு எவ்வித உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை.

### இன்பருட்டி

26—4—85ல் பருத்தித்துறைக்கு அண்மையிலுள்ள இன்பருட்டி என்னும் இடத்தில் எமது விடுதலை வீரர்கள் நடத்திய தாக்குதல் ஒன்றில் 11 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர். தொடர் வாகனங்களில் வந்து கொண்டிருந்த இராணுவத்தினர் மீது நிலக்கண்ணி வெடிகள் வைத்து நடத்திய இத்தாக்குதலில் ஒரு இராணுவக் கவச வண்டி நிர்மூலமாக்கப்பட்டது.

இத்தாக்குதலால் நிலைகுலைந்த சிங்கள ராணுவத்தினர் பருத்தித்துறை நகரினுள் புகுந்து அங்குள்ள கடைகளுக்கு தீவைக்க முற்பட்டனர். அப்போது நடந்த துப்பாக்கி சண்டையில் ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டான். புலிகளை எதிர்கொள்ள முடியாது ஏனைய இராணுவத்தினர் சிதறுண்டு ஓடினர்.

### அரியாலை

29-4-85 அன்று பிற்பகல் 2 மணியளவில் நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து யாழ் நோக்கி மூன்று கவசப் பாதுகாப்பு வண்டிகளில் வந்துகொண்டிருந்த சிங்கள இராணுவத்தினர் மீது எமது கெரில்லா வீரர்கள் நிலக்கண்ணி வெடிகளை வைத்துத் தாக்கினர். நிலக்கண்ணி வெடிப்பில் ஒரு இராணுவ வாகனம் முற்றாக நாசமாகியது. 10 இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே மாண்டனர். இதனை அடுத்து எமது வீரர்களுக்கும் சிங்கள சிப்பாய்களுக்கும் மத்தியில் துப்பாக்கிச் சண்டை மூண்டது. 3 மணி நேரம் வரை நடைபெற்ற இச்சண்டையில் விடுதலைப் புலி வீரர்கள் ராக்கட்டுகளைப் பாவித்து மற்றொரு கவச வண்டியைத் தகர்த்தனர். அதே சமயம் இராணுவத்துக்கு உதவியாக 'ஹெலிகப்டர்' ஒன்றும் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு வந்து தாக்குதலை மேற்கொள்ள ஆரம்பித்தது. எமது வீரர்கள் திருப்பிச் சுட்டதும் ஹெலிகப்டர் அங்கிருந்து பின்வாங்கியது. எமது தரப்பில் எவ்வித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை.

### பருத்தித்துறை

28—4—85 பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் ரோந்து வந்துகொண்டிருந்த இராணுவத்தினர்மீது எமது வீரர்கள் கைக்குண்டுகளை வீசித் தாக்கினர். இத்தாக்குதலில் 4 இராணுவ வீரர்கள் கொல்லப் பட்டனர்.

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# புலிகளின் குரல்

## போராளிகளும் பொதுமக்களும்

உண்மையில் ஒரு விடுதலைப் போராளி என்பவன் யார்? அவனிடம் காணவேண்டிய உயரிய குணம்சங்கள் என்ன? விடுதலைப் போராளிக்கும் பொதுமக்களுக்கும் உள்ள உறவு எவ்வகையானது? இந்தக் கேள்விகளை நாம் எழுப்புவதற்கு காரணம் இல்லாமல் இல்லை. ஏனென்றால் இன்று தமிழீழத்தில் மக்களும் இந்தக் கேள்விகளையே எழுப்புகிறார்கள். போராளிகள் யார்? போலிகள் யார்? என்பதை இனம் காணவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு எமது மக்கள் தள்ளப் பட்டிருக்கிறார்கள்.

'இயக்கம்' என்ற பெயரில், 'போராளிகள்' என்ற போர்வையில், 'போராட்டம்' என்ற சாக்கில் நாளாந்தம் நடைபெற்றுவரும் சமூக விரோத நடவடிக்கைகளோ எண்ணற்றவை. தனியார் நிறுவனங்கள், சமூக ஸ்தாபனங்கள், கல்வி நிலையங்கள், மத பீடங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் சதா சூறையாடப்பட்டு வருகின்றன. ஏழைத் தொழிலாளர்களின் ஊதியங்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன. வயோதிபர்களின் ஓய்வுப் பணம் அபகரிக்கப் படுகிறது. தனியார் வாகனங்கள் கண்டபடி கடத்தப்படுகிறது. பணமாகவும், பொருளாகவும் மக்கள் சொத்து சதா பறிக்கப்பட்டு வருகிறது. இதனால் ஒட்டுமொத்தமாக தொழிலாளர்கள், விவசாயிகள், அரச ஊழியர்கள், மத குருக்கள், மாணவர்கள், வயோதிபர்கள் என்ற ரீதியில் பரந்துபட்ட மக்கள் பாரிய அளவு பாதிக்கப்பட்டுள்ளனர். போதாக் குறைக்கு மக்கள் சதா மிரட்டப்படுகின்றனர், உதைக்கப் படுகின்றனர். ஆயுத முனையில் அவமானப்படுத்தப்படுகின்றனர். அசிங்கமான வார்த்தைகளால் இழிவுபடுத்தப்படுகின்றனர். இந்தக் கொடுமைகள் எல்லாம் புரிந்துவரும் மக்கள் விரோதிகள் தம்மை 'மக்கள் போராளிகள்' என்று அறிமுகம் செய்யும்போதுதான் மக்கள் வேதனையடைகிறார்கள். விரக்தியடைகிறார்கள். விடுதலை இலட்சியத்தில் வெறுப்படைகிறார்கள்.

யார் இந்தப் போராளிகள்? இவர்கள் யாருக்காகப் போராடுகிறார்கள்? மக்கள் இயக்கம் என்றும், மக்கள் அமைப்பு என்றும், மக்கள் புரட்சி என்றும் வெகுசன வேதாந்தம் ஓதிக்கொண்டு மக்களை அடக்கி, மக்களைச் சுரண்டி, மக்களின் இரத்தத்தை உறிஞ்சி வாழும் இந்த சமூக விரோதப் பேய்களின் நோக்கம்தான் என்ன?

அரச பயங்கரவாதப பூகம்பத்தால் இன்று தமிழீழம் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. தமிழினத்தை பூண்டோடு ஒழித்துக்கட்ட எதிரி கங்கணம் கட்டி நிற்கிறான். எமது மக்களோ வரலாற்றில் கண்டிராத அடக்குமுறையால் நசுக்கப்பட்டுவருகின்றனர். அவர்களது நாளாந்த வாழ்க்கை ஜீவமரணப் போராட்டமாக மாறியிருக்கிறது. தாங்கொணாத் துன்பத்தில் தோய்ந்துபோய் வாழும் எமது மக்கள்மீது மேலும் கொடுமைகளை இழைப்பவர்கள் ''மக்கள் போராளிகளாக'' இருக்க முடியாது. இவர்கள் மக்கள் விரோதிகள். இனத் துரோகிகள். சிங்கள இனவாத ஓநாய்களைவிட மிகவும் மோசமான பயங்கரவாதிகள்.

ஒரு விடுதலைப் போராளியானவன் மக்களின் விடுதலை என்ற இலட்சியத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கிறான். இந்த வகையில் அவன் ஒரு மகத்தான இலட்சியவாதி. ஒரு சமூகப் புரட்சிவாதி. முதலில் அவன் தனக்குள் புரட்சி செய்து அந்தப் புரட்சிகர விழிப்புணர்வால் சமூகப் பிரக்ஞையைப் பெறுகிறான். பொதுநலம் என்ற இலட்சியத்தீயில் தனது சுயநலத்தை எறிந்துவிட்டு மக்களுக்காக, மக்களின் சுபிட்சத்திற்காக, மக்களின் சுதந்திரத்திற்காக அவன் வாழ்கிறான். மனிதமும், மக்கள் நேயமும், மக்கள் அபிமானமும் கொண்ட அவனே உண்மையில் ஒரு மக்கள் போராளி.

இந்த உயரிய பண்புகளைத் தழுவிய, இந்த உன்னத இலட்சியத்தை வரித்த, மக்கள் போராளிகளை அணி திரட்டிக்கொண்ட ஒரு இயக்கமே உண்மையான மக்கள் இயக்கமாகும். அந்த புரட்சிகர இயக்கமே மக்களின் விடுதலைக்காகப் போராடும் அருகதையைப் பெறுகிறது. மக்களும் அந்த இயக்கத்தையே இனங் கண்டு அரவணைத்துக்கொள்வார்கள்.

# தமிழீழ விடுதலை இயக்கங்கள் இணைந்தன

நான்கு தமிழீழ விடுதலை இயக்கங்கள் ஒன்றாக இணைந்தன

The Eelam movement

Inching towards unity

Tamil militant groups unite


SRI LANKA

Tamil Militants Unite

Tamil militant groups come together



தமிழீழத் தனியரசு, சோசலிசப் புரட்சி ஆகிய எமது அடிப்படை இலட்சியங்களை பலப்படுத்தும் நோக்கிலும், புரட்சிகர முற்போக்கு சக்திகளை ஒன்றிணைத்து சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுக்கும் இலக்கிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஏனைய முக்கிய விடுதலை அமைப்புகளுடன் ஒன்றுசேர்ந்து இயங்க முடிவு செய்திருக்கிறது. விடுதலைப் போராளிகள் மத்தியில் ஒற்றுமைக்கான தேவையையும், அவசியத்தையும் அதன் வரலாற்று நிர்ப்பந்தத்தையும் நன்கு உணர்ந்துகொண்ட நாம், ஒரு புதிய புரட்சிகர பாட்டாளி வர்க்கத் தலைமையை கட்டி எழுப்பும் நோக்கில் ஏனைய விடுதலை இயக்கங்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ளோம். ஈழத் தமிழரின் அரசியல் வரலாற்றில் முக்கியம் வாய்ந்த இந்த ஒருமைப்பாடு கடந்த ஏப்ரல் 10ந் திகதி சாத்தியமாகியது. இது சம்பந்தமாக வெளியிடப்பட்ட கூட்டுப் பிரகடனத்தை கீழே பிரசுரிக்கிறோம்.




ஈழத் தமிழ் பேசும் மக்களின் தேசிய சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுப்பதில் ஒன்றுபட்டுச் செயல்பட ஈழத் தேசிய விடுதலை முன்னணியும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் முடிவு செய்துள்ளன. 1984ம் ஆண்டு ஏப்ரல் மாதம் உருவாக்கப்பட்ட ஈழத் தேசிய விடுதலை முன்னணியானது மூன்று முக்கிய விடுதலை அணிகளின் கூட்டமைப்பாகும். தமிழீழ விடுதலை இயக்கம் (T.E.L.O.) ஈழப்புரட்சி அமைப்பு (EROS), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) ஆகியன இக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

புரட்சிகர ஆயுதப் போராட்டப் பாதையை தழுவிக் களத்தில் போராடும் இந்த நான்கு விடுதலை இயக்கங்கள் மத்தியில் ஒருமைப்பாடு ஏற்பட்டமை எமது விடுதலைப் போராட்டத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். ஈழத் தமிழரின் சுதந்திரப் போரில் ஒரு திருப்புமுனையாக அமைந்துள்ள இந்நிகழ்ச்சி புரட்சிகர சக்திகளை ஒன்றிணைத்து ஆயுதப் போராட்டத்தை ஒருமுகப்படுத்தி வலுப்படுத்த வழிகோலியுள்ளது. இராணுவப் பயங்கரவாத அட்டூழியங்களையும், இனக் கொலையையும் எதிர்நோக்கி தாங்கொணாத் துன்பத்தை அனுபவித்து வரும் மக்களுக்கு எமது விடுதலை அணிகள் ஒன்றுபட்ட செய்தி பெருமகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் அளிப்பதோடு, அவர்களது ஆன்ம உறுதியையும், விடுதலை உணர்வையும் பலப்படுத்துமென்றே கருதுகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சி அமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகியவற்றின் கூட்டமைப்பான ஈழத் தேசிய விடுதலை முன்னணியும் கீழ்க்கண்ட அரசியல் ரீதியான அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றுபட்டுச் செயல்படத் தீர்மானித்துள்ளன.

1. ஸ்ரீலங்கா ஆதிக்கத்திலிருந்தும், அடக்குமுறையிலிருந்தும் எமது தாயகத்தின் சுதந்திரத்தையும், இறைமையையும் வென்றெடுத்தல்.
2. இலங்கைவாழ் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுகின்ற தனியரசைத் தவிர்ந்த வேறெந்த குறைந்தபட்ச சமரசத் திட்டத்தையும் அங்கீகரிப்பதில்லை.
3. பரந்துபட்ட மக்களின் பங்களிப்போடு பரிணமம் பெறும் வெகுஜன ஆயுதப் போராட்டத்தை (மக்கள் போராட்டத்தை) எமது போராட்டப் பாதையாகக் கொள்ளுதல்.
4. தேசிய சுதந்திரப் போராட்டத்தோடு சோசலிச புரட்சியையும் முன்னெடுத்து, சுதந்திரத் தாய்நாட்டில் சோசலிச சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்.
5. உலக ஏகாதிபத்திய நவகாலனித்துவப் பிடியிலிருந்து எமது தேசத்தை பூரணமாக விடுவித்து, அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடித்தல்.

தற்போது ஒப்புக்கொள்ளப்பட்ட குறைந்தபட்ச வேலைத் திட்டமாக, முக்கிய அரசியற் பிரச்சனை குறித்து ஒன்றுகூடிக் கலந்தாலோசித்து முடிவெடுப்பதெனவும், ஸ்ரீலங்கா அரசபடைகளுக்கெதிரான எமது ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளை ஒன்றுபடுத்தி செயற்படுத்துவதெனவும் தீர்மானித்துள்ளோம்.

எமது இந்த ஒருமைப்பாடு விரிவுபட்டு வலுப்பெற ஒத்துழைப்பும் ஆதரவும் தருமாறு எமது மக்களின் விடுதலையில் அபிமானங்கொண்ட சகல தமிழ் மக்களையும் வேண்டிக் கொள்கிறோம்.

# விடுதலையும் கலாச்சாரமும்

அமில்கார் கப்ரால்

ஒரு மக்கள் சமூகம் மீது அன்னியர்கள் அடக்குமுறை ஆட்சி நடத்தும்போது வெறும் பொருளாதாரச் சுரண்டலைமட்டும் செய்வதில்லை. பொருளாதாரச் சுரண்டலை தீவிரமாக நடத்துவதற்காக மக்கள் சமூகத்தின் கலாச்சார வாழ்வை அடக்குமுறையாளர்கள் திட்டமிட்டு நசுக்கி இருக்கிறார்கள் என்பது வரலாறு பகரும் உண்மை. அடக்கப்பட்ட மக்கள் சமூகத்தினுள் கலாச்சார ரீதியாக இயங்கக் கூடியவர்களை ஒழித்துக்கட்டுவதன் மூலம்தான் அடக்குமுறையாளர்கள் தங்கள் ஆட்சியை உறுதிப்படுத்துகின்றனர்.

மக்களின் கலாச்சார வாழ்வினை அழிப்பதற்கும், வீரியமிழக்க வைப்பதற்கும், முடக்குவதற்குமே அடக்குமுறையாளர்கள் ஆயுதத்தினைப் பிரயோகின்றனர். ஏனெனில் ஒரு உறுதியான உள்நாட்டுக் கலாச்சார வாழ்வு இருக்குமிடத்தில் அந்நிய ஆட்சி நிரந்தரமடைய முடியாது.

ஒரு மக்கள் சமூகம் அடக்கப்படும்போது அம்மக்களின் உணர்வுகள் வளர்ந்துவந்து ஒரு குறிப்பிட்ட திருப்பு முனையில் கலாச்சார வடிவான எதிர்ப்பாகத் திரள்கிறது. இதனை உடைத்தெறிய முடியாது- இந்த கலாச்சார எதிர்ப்பே அரசியல் விழிப்பாகவும், பொருளாதாரச் சுரண்டலுக்கு எதிரான இயக்கமாகவும், ஆயுத எதிர்ப்பாகவும் தோற்றம் கொள்கிறது.

அடக்குமுறையாளர்கள் ஒரு மக்கள் சமூகத்தின்மீது தங்கள் ஆட்சியை நிலைகொள்ளச் செய்ய பின்வருவனவற்றுள் ஒன்றைத்தான் தெரிவு செய்யலாம்.

1. **அடக்கப்பட்ட மக்கள் அனைவரையும் ஒழித்துக் கட்டுதல்** — இதனால் கலாச்சார எதிர்ப்பு பிறக்க இடமில்லாமல் செய்யலாம்.
2. **அடக்கப்பட்ட மக்களின் கலாச்சார வாழ்வுக்குப் பங்கம் வராதவாறு ஆதிக்கம் செய்தல்** — அதாவது சுரண்டலை எதிர்க்காத வகையில் அடக்கப்பட்டவர்களது கலாச்சாரத்தை இசைய வைத்தல்.

இவற்றுள் முதலாவது முறைதான் சரித்திரத்தில் நடந்துள்ளது. இரண்டாவது முறை எங்குமே இன்றுவரை நடந்ததில்லை. மனித வர்க்கத்தின் அநுபவத்தில் இந்த இரண்டாவது முறை நடைபெற முடியாத தொன்று. ஒரு சமூகத்தின் கலாச்சாரத்தைப் பேணியபடி, அந்த சமூகத்தின் பொருளாதார அரசியல் வாழ்வினை அடக்கி ஆள்வது முடியாத காரியம்.

ஆனால் அடக்குமுறையாளர்கள் அடக்கப்பட்டவர்களை தங்கள் இனத்தினராக மாற்றலாமென எண்ணுவதுண்டு. இது நடைமுறையில் எப்படி என்று பார்த்தால், ஏறத்தாழ வன்முறை மூலம் மக்களின் கலாச்சாரத்தினை மறுப்பதாகவே இது அமையும். ஆனால் அவ்விதம் ஒரு மக்களின் கலாச்சாரத்தினை எளிதாக செயலிழக்க வைக்க முடியாது என்பதனால் இந்தக் கருத்துக்கு அர்த்தமில்லை. "ஆபிரிக்கா கலாச்சாரம் இல்லாத ஒரு கண்டம்" என போர்த்துக்கீசர்கள் கூறிய கருத்து இதற்கு உதாரணம்.

இயற்கையிலேயே கறுப்பர்கள் குறைவுபட்ட மனிதத்தன்மை உள்ளவர்கள் என்ற சித்தாந்தம் கூட இத்தகையதுதான். இதன்படி இயற்கையே கறுப்பு வெள்ளையானது என்கிறது. உலகின் மிகக் குரூரமான முறை மூலம் தென்னாபிரிக்காவின் சிறு பான்மை வெள்ளையர்கள் பெரும்பான்மைக் கறுப்பர்களை அடிமைகளாக வைத்துள்ளனர். இந்த சித்தாந்த நாடகத்தை ஏகாதிபத்தியவாதிகள் ஆடுவதே ஒன்றை மறைப்பதுக்காகத்தான் — அது அடக்கப்பட்ட மக்களுக்கு ஒரு கலாச்சாரம் இருக்கிறது என்ற உண்மையாகும்.

மாறுதலுக்கு இடம்விடும் சமூகமாயினும் சரி மாறமுடியாத சமூகமாயினும் சரி கலாச்சாரம் தான் அதன் ஜீவநாடி. சமூகத்தில் எல்லாவித உறவுகளையும் கலாச்சாரமே தீர்மானிக்கிறது. அடக்கப்பட்ட சமூகத்தின் சரித்திரத்தையும் இதர அம்சங்களையும் ஒரு இலட்சியம் வழிநடத்தினால் அந்த இலட்சியம் அந்த சமூகத்தின் கலாச்சாரத்துக்கே உரியது. அந்நிய ஆதிக்கத்தினை கலாச்சாரத்தின் மூலமே எதிர்ப்பதென்பதன் விளக்கம் இது.

கலாச்சாரம் கடந்தகால சரித்திரத்தின் விளைவு மட்டுமல்ல எதிர்கால சரித்திரத்தை நிர்ணயிக்கும் சக்தியாக விளங்குகிறது. தனது சமூகக் கட்டுமானத்துக்குள் நிலவும் குழுக்களின் உறவுகளையும் மனித உறவுகளையும் ஆள்வதன் மூலம் கலாச்சாரம் சரித்திரத்தையே ஆட்சி செய்கிறது.

இந்த உண்மையை புரிந்து கொள்ளாததால் பல அடக்குமுறைகள் தோல்வி கண்டுள்ளன. சில விடுதலை இயக்கங்களின் தோல்விகளுக்கும் இதுவே காரணம்.

தேசிய விடுதலையின் அம்சங்களை இனி கவனிப்போம். ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கு எதிரான இயக்கமே தேசிய விடுதலை இயக்கம். ஏகாதிபத்தியம் ஒரு மக்கள் சமூகத்தின் சுதந்திரமான உற்பத்திமுறை வளர்ச்சியைப் பிடுங்கிவிடுகிறது. இந்த உற்பத்தி முறையே இயக்குகிறது. எனவே அந்த மக்களின் இயற்கையான சரித்திர வளர்ச்சியை மறுப்பதாகவே ஏகாதிபத்திய சுரண்டல் அமைகிறது. இதுதான் ஏகாதிபத்தியத்தின் இலட்சணம்.

ஒவ்வொரு சமூகமும் இயற்கையை உற்பத்திச் சாதனமாக உபயோகிக்கிறது. இயற்கையுடன் சமூகமும் கொள்ளும் உறவு வேறு வகையானது. எனவே இந்தச் சமூகங்கள் தங்களுக்குள் கொள்ளும் உறவுகளிலும் மனித உறவுகளிலும் வித்தியாசங்கள் ஏற்படுகின்றன. இது வர்க்க மோதலாக விளைகிறது. **இது சரித்திரத்தையும் கலாச்சாரத்தையும் தீர்மானிக்கிறது.**

'மரத்தில் மலர்போன்று சரித்திரத்தினின்றும் மலர்வது கலாச்சாரம். சமூகமானது சூழ்நிலையையும், அதனால் அமைக்கப்பட்ட சமூகத்தின் தன்மையையும் வெளியிடுகிறது. ஏற்றத்தாழ்வுகளையும் மோதல்களையும் அறிய உதவுவது சரித்திரம். **ஏற்றத் தாழ்வுகளை இணைத்தும் மோதல்களைத் தவிர்த்தும் சமூகத்தை இடைவிடாமல் புனருத்தாரணம் செய்வது கலாச்சாரம்.**

சமூகத்தின் உயிரூட்டமான பொறுப்புணர்வுகளைப் பேணுவது கலாச்சாரம்தான். ஏகாதிபத்திய அடக்குமுறை ஒரு சமூகத்தின் சரித்திரத்தையும் கலாச்சாரத்தையும் சேர்த்தே அழிக்கிறது. **இதனால் தேசிய கலாச்சாரங்களே தேசிய விடுதலை இயக்கங்களை உருவாக்கி ஊக்குவிக்கிறது. மக்களின் சமூக அரசியல் அம்சங்களினது நிலை எப்படி இருப்பினும், அவர்களது கலாச்சாரம்தான் விடுதலை இயக்கமாகவடிவெடுக்கிறது.**

**சரித்திரத்தினின்றும் ஒரு சமூகம் அன்னியப்படுத்தப்பட முடியாத உரிமையே தேசிய விடுதலையின் அத்திவாரம் ஆகும்.** எனவே ஒரு விடுதலை இயக்கத்தின் நோக்கம் ஏகாதிபத்திய வாதிகளால் பறித்தெடுக்கப்பட்ட இந்த உரிமையினை மீட்பதாகும். அதாவது **தேசிய உற்பத்தி சக்திகளை விடுவிக்கும் இயக்கமே இது.** ஆகவே தேசிய உற்பத்தி முறைகள் பரிபூரணமாக விடுதலை பெறுவதே தேசவிடுதலை. உற்பத்தி சக்திகள் விடுபட்டதும் அந்த சமூகத்தின் கலாச்சாரத்துக்கு புதிய வளர்ச்சி ஏற்பட இடம் கிடைக்கிறது.

கலாச்சார விடுதலை என்பது அன்னிய கலாச்சாரத்தை முற்றாக நிராகரிப்பதல்ல. வளர்ச்சிக்கு வேண்டியவற்றை வெளியிலிருந்து சுவீகரித்து தேவையற்றவற்றை நீக்கி ஒரு தேசத்தின் கலாச்சாரத்தை வளர்த்தலாகும்.

**அன்னிய அடக்குமுறை என்பது கலாச்சார அடக்குமுறை என்றால் அன்னியரிடமிருந்து விடுதலை பெறுவது கலாச்சார விடுதலை பெறுவதாகும். இதன்படி பார்த்தால் விடுதலை இயக்கம் என்பது கலாச்சார சக்தியின் அரசியல் அமைப்பு ஆகிறது. எனவேதான் மக்களது கலாச்சாரத்தினை உணர்ந்தவர்களாக விடுதலைப் போராளிகள் இருப்பது அவசியமாகிறது.**

இயந்திர நுட்பமும், நிற வேறுபாடுகளும் கலாச்சார அறிகுறிகள் என்ற போலிக் கருத்துக்கள் மறைந்துவிட்டன. எல்லாவித



மக்களிடமும் கலாச்சார உணர்வு உள்ளது என்பது இன்று ஒப்புக்கொள்ளப்பட்ட விடயம். மக்கள்தான் கலாச்சாரத்தின் படைப்பாளிகளும் சேமிப்பாளர்களும் என்பதனை போராளிகள் உணர்வது அவர்களது கடமை. **மக்கள் அனைவரதும் பொதுவான கலாச்சாரப் பண்பினை** பிரதிபலிக்காது ஒரு பகுதியினரை மட்டும் விடுதலை இயக்கம் பிரதிபலிக்கக் கூடாது.

கலாச்சாரத்துக்கு ஒரு பொது அமைப்பு இருப்பினும் மக்களின் எல்லாப் பகுதியினரும் ஒரே தரத்திலான கலாச்சாரகாரர்களாக இருக்க முடியாது. அவர்களிடையே வளர்ச்சி வேறுபாடு இருக்கும். ஒவ்வொரு சமூகப் பகுதியும் பொருளாதாரத்தினால் உருவாக்கப்பட்டாலும் அப்பகுதியை ஆள்வது ஒரு சமூகப் பிரிவினரே. விடுதலைப் போர்ப் பார்வையினை அவர்களது கலாச்சாரப் பண்பே தீர்மானிக்கிறது. இந்த இடத்தில்தான் கலாச்சாரம் தனது முழு விசேஷத் தன்மையையும் ஒரு தனி மனிதன் மூலம் வெளியிடுகிறது.

ஆபிரிக்காவில் கிராமப்புறங்களிலிருந்து நகரங்கள்வரை பல்வேறு வடிவங்களில் கலாச்சாரம் வேறுபட்ட தன்மைகளை வெளியிடுகிறது. **விடுதலை இயக்கங்கள் இந்த வேறுபாடுகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.**

சுரண்டலுக்காக ஏகாதிபத்தியவாதிகள் அடக்கப்பட்டவர்களிடையே கலாச்சார பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கியுள்ளனர். இதன் விளைவாக நகர்ப்புறத்தினரும் கிராமத்தின் குட்டி முதலாளிகளும் அந்நிய கலாச்சாரத்தினை ஏற்று தங்கள் சொந்த மக்களின் கலாச்சாரத்தை ஏளனப்படுத்தும் நிலை பிறக்கிறது. சுயநிலத்திலிருந்து இந்த அந்நிய கலாச்சாரவாதிகள் அந்நியமாகின்றனர். விடுதலை இயக்கத்தில் இவர்களது நிலையினை இதுவே நிதானிக்கிறது. எனவே போர்க் காலத்தின் தியாகங்களும் அன்றாடப் பிரச்னையுமே இவர்களை மனம் திருப்ப வைக்க முடியும்.

இருந்தும் மனம் திரும்பாமலே சந்தர்ப்பவாதிகளாக விடுதலை இயக்கத்தினுள் சிலர் நுழையலாம் இவர்கள் தங்களது படிப்பறிவு, கருவிஞானம் ஆகியவற்றால் இயக்கத்தின் உயர் பதவிகளைக் கைப்பற்றக்கூடும். எனவே கலாசாரத் தளத்திலும் அரசியல் தளத்திலும் இது பற்றிய தீவிர விழிப்பு அவசியம். எனினும் அன்னிய மனோபாவக்காரர்களாக அடக்குமுறையாளர்களினால் உருவாக்கப்பட்டவர்களிடமிருந்துகூட உண்மையான விடுதலை வீரர்கள் பிறந்துள்ளனர். வர்க்க உணர்வினை இவர்கள் முற்றாகத் துறப்பதுதான் போராட்டத்திற்கு முக்கியமானது.

> **விடுதலை இயக்கம் முன்னேறும் போது அது பல்வேறு நோக்கங்களை ஒன்றிணைக்க வேண்டும். உள்வேறுபாடுகளைக் களைந்து பொதுவான இலட்சியமாக விடுதலையை ஏற்றுக் கொள்ள வேண்டும். பெரும்பான்மையான மக்கள் கஷ்டங்களுக்கும் தியாகங்களுக்குமிடையே விடுதலை இயக்கத்தின் இலட்சியத்தை இதயபூர்வமாக ஆதரிப்பார்களேயானால் அது ஒரு பெரிய அரசியல் வெற்றியும் ஒழுக்கவியல் வெற்றியுமாகும். இது ஒரு மாபெரும் கலாச்சார வெற்றி.**

**நாட்டின் படித்த அறிவுவாதிகள், பட்டம் பெற்றவர்கள், சுயமான தொழில்களில் உள்ளவர்கள். கிராமத்து மேல்மட்டத்தினர் ஆகியோர் விடுதலைப் போரின்போது அன்னியருக்கு ஆதரவாக நடந்திருக்கின்றனர்.** இவர்கள் அன்னிய கலாச்சாரத்தை மதித்ததின் விளைவே இது. கலாச்சார மதிப்பீடே அரசியல் சார்பினை தீர்மானிக்கிறது என்பதுக்கு இது உதாரணமாகும். வர்க்க உணர்வையும் இதில் காணலாம். இவர்கள் தங்களது வர்க்கத் தேவைகளே பிரதானமானவை என்ற மனோபாவம் உள்ளவர்கள், போராட்டத்தின் அரசியல், பொருளாதார, கலாசார அடிப்படைகளைப் பேணவேண்டுமானால் விடுதலை இயக்கத்தினர் இந்த விஷயத்தை கவனத்தில் கொள்வது அவசியம்.

**மனமாற்றமடையும் சமூகத்தின் மேல்தட்டில் உள்ளவர்களின் கலாச்சாரப் பங்கும் மக்களின் கலாச்சாரப் பங்கும் ஒற்றுமை பெறுகிறபோதுதான் போராட்டம் திறனடையும். இதில் முக்கியமானதையும், முற்போக்கானதையும், புரட்சிகரமானதையும் போராளிகள் பேணுவது தேசிய கலாசாரத்துக்கே வழிகாட்டும்.**

ஒவ்வொரு சமூகப் பிரிவின் கலாசார அம்சங்களையும் விடுதலை இயக்கம் ஐக்கியமாக்கிக்கொள்வதும் இந்த ஐக்கியம் ஒரு தேசிய கலாச்சாரக் கட்டமைப்பாக உருவாவதும் அவசியம். தேசிய உணர்வுக்கும், ஒழுக்கத்துக்கும், பல்வேறு சமூகப் பிரிவுகளின் கலாசார அம்சங்களை இணைப்பது ஒரு உபாயமாகும். இது விடுதலை இயக்கத்துக்கு இன்றியமையாதது. இது தேசியச் சூழலுடன் மக்களை இணைக்கிறது. தங்களது பிரச்னைகளையும் அபிலாஷைகளையும் மக்கள் நேரே சந்திக்க வகை செய்கிறது.

விடுதலை இயக்கம் முன்னேறும் போது அது பல்வேறு நோக்கங்களை ஒன்றிணைக்க வேண்டும். **உள் வேறுபாடுகளைக் களைந்து பொதுவான இலட்சியமாக விடுதலையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.** பெரும்பான்மையான மக்கள் கஷ்டங்களுக்கும் தியாகங்களுக்குமிடையே விடுதலை இயக்கத்தின் இலட்சியத்தை இதயபூர்வமாக ஆதரிப்பார்களேயானால் அது ஒரு பெரிய அரசியல் வெற்றியும் ஒழுக்கவியல் வெற்றியுமாகும். இது ஒரு மாபெரும் கலாசார வெற்றியுமாகும்.

அடக்குமுறையாளர்களுக்கும் அடக்கப்பட்டவர்களுக்குமிடையே உள்ள கலாச்சார வேறுபாடு எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கு மேற்படி வெற்றி சாத்தியமாகிறது. அடக்குமுறையாளர்களின் கலாச்சாரத்துடன் ஒற்றுமையுள்ள மக்களை அடக்கி ஆள்வதும் ஆட்சியை நீடிக்க வைப்பதும் எளிது என்கிறது சரித்திரம்.

ஆபிரிக்கா விஷயத்தில் காலனி சக்திகள் போட்ட தப்புக் கணக்கு ஆபிரிக்க மக்களின் கலாசார சக்தியினைக் குறைத்து மதிப்பிட்டமையாகும். இதன் விளைவாக போர்த்துக்கீசிய காலனி முறையால் இலாபமடைந்திராத போர்த்துக்கீசிய மக்கள் மூன்று காலனி யுத்தங்கள் மூலம் தங்கள் தப்புக்கணக்கிற்கு பலனை அநுபவிக்கின்றனர்.

போர்த்துக்கீசரின் காலனிகளில் அடக்கப்பட்ட மக்களின் எழுச்சிகள் அடக்குமுறையாளர்களினால் ஆரம்பத்தில் நசுக்கப்பட்டது. இதற்கு அடக்கப்பட்டவர்களினுள்ளேயே ஒரு பகுதியினரை தனக்கு ஆதரவாக்கி இருக்கிறது காலனி சக்தி. சொந்த மக்களுக்கும் கலாச்சாரத்துக்கும் பற்றுணர்வு காட்டிய மேல் மட்டத்தினர் நிர்மூலமாக்கப்பட்டனர். பெருவாரி பொதுமக்கள் கொலை செய்யப்பட்டனர். காலனி ஆதிக்கம் உறுதியடைந்தது. ஆனால் ஆபிரிக்க மக்களின் கலாசார எதிர்ப்பு அழிக்கப்படவில்லை. துரோகங்களுக்கு ஆளாகி, நசுக்கப்பட்ட கலாசாரம், கிராமங்களிலும், வருந்தாங்களிலும், காலனியாதிக்கத்தினால் பாதிப்படைந்து தலைமுறையினரின் உயிரிலும் ஒளிந்திருந்து, எல்லா விதமான புயல்களையும் தாங்கி ஜீவித்திருக்கிறது. சரியான சந்தோஷ்ண சுவாத்தியத்துக்காகக் காத்திருக்கும் வித்தினைப்போலப் பொறுத்திருந்த ஆபிரிக்கக் கலாச்சாரம் இன்று எங்கள் கண்டம் முழுவதிலும் தேசிய விடுதலைப் போர்களுக்காக முழுமை

11ம் பக்கம் பார்க்க

# யாழ் நகரில்

**தமிழீழத்தில் சிங்கள ஆயுதப் படைகளின் பலத்த பாதுகாப்பு அரணாகத் திகழ்ந்து வந்த யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையம் மீது பலத்த தாக்குதலை நடத்தி, பொலிஸ் கட்டிடங்களை தரைமட்டமாக்கி, இதுவரை நடைபெறாத மாபெரும் இராணுவ சாதனையை எமது விடுதலை வீரர்கள் நிலைநாட்டினர். ஏப்ரல் 10ந் திகதி இரவு மேற்கொள்ளப் பட்ட இந்தப் பெரும் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது சிங்களப் பொலிஸார் சிதறி ஓடினர். பெரும் தொகையான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.**

இதே நேரம் தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்த இடத்திற்கு அருகாமையிலுள்ள "சித்திரவதைக் குகை" எனப் பெயர் பெற்ற குருநகர் இராணுவ முகாமில் இருந்து ஆயுதப் படைகள் வந்து சேர்வதைத் தடுக்கு முகமாக பிரதான பாதையில் இருந்த பல மதகுகளையும் தகர்த்ததுடன் வீதியின் பல இடங்களிலும் நிலக் கண்ணி வெடிகளை வைத்து எமது வீரர்கள் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் இராணுவத்தினர் பொலிஸ் நிலையத்துக்கு வராதபடி தடுக்கப்பட்டனர்.

இறுதியில் எமது போராளிகள் நான்கு வாகனங்கள் நிறைந்த பெரும் தொகையான ஆயுதங்களுடன் தளத்துக்கு மீண்டனர்.


பொலிஸ் ஆயுதக் கிடங்கிலிருந்து 35.303 துப்பாக்கிகள் 54 புத்தம் புதிய துப்பாக்கிகள் 2 உப இயந்திரத் துப்பாக்கிகள் (எஸ். எம். ஜி.) 2 எஸ். ஏ. ஆர். 80 சிங்கப்பூரில் தயாரிக்கப்பட்ட தானியங்கித் துப்பாக்கிகள். 1 எஸ். எல். ஆர். துப்பாக்கி 50க்கும் அதிகமான கழுத்துப்பாக்கிகள் 175 அதிசக்தி வாய்ந்த கைக்குண்டுகள், 3 கண்ணீர்ப்புகைத் துப்பாக்கிகள், 100 கண்ணீர்ப் புகைக் குண்டுகள் பல்லாயிரக் கணக்கான துப்பாக்கி ரவைகள் அடங்கிய "ரவைப்பெட்டிகள்" ஆகியவற்றைக் கைப்பறறினர்.

இந்தத் தாக்குதலில் பிரித்தானிய எஸ். ஏ. எஸ். இஸ்ரேலிய மொசாட் போன்ற சர்வதேச நாசகாரக் கும்பல்களினால் பயிற்றப்பட்ட பலர் காயமடைந்தனர்.

**இரண்டு சிங்களப் பொலிசார் ஆயுதங்களுடன் எமது வீரர்களிடம் சரணடைந்தனர். சரணடைந்த இரண்டு பொலிசாரும் எதுவித துன்புறுத்தலுமின்றி எமது வீரர்களால் மன்னிப்பளித்து விடப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.**

ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்பு அரண் எனக் கருதப்பட்ட யாழ் பொலிஸ் நிலையத்தை எமது வீரர்கள் நிர்மூலமாக்கியமை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் ஆநுாகலத்தை ஏற்படுத்தியுள்ளது. தங்கள் வீடுகளில் இருந்து வீதிகளுக்கு வந்த பொதுமக்கள் எமது வீரர்களைப் பாராட்டி மகிழ்ச்சிகர ஆரவாரம் தெரிவித்தனர்.

சிங்கள பௌத்த பேரினவாத அரசின் பாதுகாப்பு அமைச்சைப் பொறுத்தவரை யாழ்ப்பாண பொலிஸ் நிலையமானது வடமாகாணத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததும், பெரியதும், பாதுகாப்பு மிகுந்ததுமாகும். யாழ் மாவட்டத்திலுள்ள பல முக்கிய பொலிஸ் நிலையங்கள் மூடப்பட்டுள்ளதால் யாழ் பொலிஸ் நிலையம் தமிழ் மக்களுக்கெதிரான சிங்கள அடக்குமுறை ஆட்சியின் தலைமையமாக செயற்பட்டு வந்தது. இப் பொலிஸ் நிலையம் தனக்கு அண்மையில் குருநகர் இராணுவ முகாமையும், வடகிழக்கு ரூலீ



## புலிகளின்

# புலிகள் சாதனை

யில் யாழ்ப்பாணக் கோட்டையையும் பாதுகாப்பு அரண்களாகக் கொண்டு 24 மணி நேரமும் தீவிர கண்காணிப்புக்கும் காவலுக்கும் உட்படுத்தப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. அத்தோடு இப் பொலிஸ் நிலையத்தைச் சூழ முட்கம்பி வேலிகளும், மண்சாக்கு அரண்களும், கண்காணிப்புக் கோபுரமும் அமைந்திருந்ததால், இதனைத் தாக்குவது இயலாத காரியமென சிங்கள அரசு கருதியது.

ஏப்ரல் மாதம் 10ந் திகதி இரவு 9-30 மணி. பல அதிரடி அணிகளைக் கொண்ட விடுதலைப் புலிகளின் கெரில்லாப் படை போன்று நவீன ரக ஆயுதங்களுடன் யாழ் பொலிஸ் நிலையத்தை சூழ்ந்துகொள்கின்றன.

அதே வேளை எமது வீரர்களின் நடவடிக்கை காரணமாக யாழ் நகரின் மின்சார சப்ளையும், தகவல் தொடர்புகளும் திடீரென துண்டிக்கப்படுகின்றன. எதிரி உசாராவதற்கு முன் மின் வேகத்தில் தாக்குதல் ஆரம்பமாகிறது. ராக்கட்டுகள், இயந்திரத் துப்பாக்கிகள், கைக்குண்டுகளை ஏவும் துப்பாக்கிகள் போன்ற கனரக ஆயுதங்கள் கதறத் தொடங்கின. ராக்கட்டுகளின் வெடிச் சத்தத்தால் யாழ் நகரமே அதிர்ந்து கொண்டிருந்தது. பல மணி நேரமாக குண்டு மழை பொழிந்தது. இந்தக் கடுமையான தாக்குதலை தாக்குப்பிடிக்க முடியாத பொலிஸார் பதட்டமடைந்து சிதறியோடினர்.


மூர்க்க முனைப்புடன் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக்கொண்டு பொலிஸ் நிலையத்தினுள் உட்புகுந்த எமது வீரர்கள் ஆயுதக் களஞ்சியத்தைச் சூறையாடி பெரும் தொகையான ஆயுதங்களையும் துப்பாக்கி ரவைகளையும், அதிசக்தி வாய்ந்த கைக் குண்டுகளையும் கைப்பற்றினர். பின் அதிசக்திவாய்ந்த வெடிமருந்துக் குண்டுகள் வைத்து பொலிஸ் நிலையத்தையும், டி. ஐ. ஜீ. தலைமைக் காரியாலயத்தையும் தகர்த்தெறிந்தனர்.

## இராணுவ வாகனம் தகர்ப்பு

தமிழீழ விடுதலைப் புலி இயக்கத்தின் கெரில்லா அதிரடிப்படை அணியொன்று இராணுவ வாகனம் ஒன்றை கண்ணிவெடி வைத்து தகர்த்ததில் 20க்கும் மேற்பட்ட சிங்கள இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் 22-4-85 அன்று பகல் 2 மணியளவில் முல்லைத் தீவு மாவட்டத்தில் உள்ள புதுக் குடியிருப்பு எனும் இடத்தில் நடைபெற்றது.

எமது கெரில்லா வீரர்கள் புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் நிலக் கண்ணி வெடிகளை தாட்டுவைத்து காத்திருந்தனர். எமது வீரர்கள் எதிர்பார்த்தபடி 'தேடுதல் வேட்டை' என்ற பெயரில் அப்பாவித் தமிழ் இளைஞர்களை கைது செய்வதற்காக இராணுவ வாகனங்கள் வந்தன. உடனே எமது வீரர்கள் நிலக் கண்ணிவெடியை வெடிக்கப் பண்ணினர். இராணுவ வாகனம் ஒன்று சுக்குநூறாகியது. அதிலிருந்த 20க்கு மேற்பட்ட சிங்களச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். பின்னால் வாகனங்களில் வந்து கொண்டிருந்த இராணுவத்தினரை நோக்கி எமது வீரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் இராணுவத்தினர் பின்வாங்கி ஓடினர். எமது தரப்பில் எதுவித உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை.

எமது வீரர்களை எதிர்கொள்ள முடியாத கூலிப் படையினர் அப்பாவித் தமிழ் இளைஞர்களையும் சந்தைக்கு பொருட்கள் வாங்க சென்றவர்களையும் கட்டுக் கொன்றுவிட்டு அவர்களையும் பயங்கரவாதிகள் என பெயர் சூட்டுவது மிகவும் நகைப்புக் கிடமானது.



போர்ப் பயிற்சி

# தென்னாபிரிக்க வி

கடந்த சில மாதங்களாக தென்னாபிரிக்காவில் வெகு ஜனக் கிளர்ச்சி பூகம்பமாக வெடிக்கத் தொடங்கியுள்ளது. ஆயிரம் ஆயிரம் கறுப்பின மக்கள் சிறு பான்மை வெள்ளையரின் இனவெறி ஆட்சிக்கெதிராக கிளர்ந்தெழுந்து போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். தென்னாபிரிக்க இனவெறி அரசு மிருகத்தனமான முறையில் இந்த மக்கள் கிளர்ச்சிகளை நசுக்கி நூற்றுக்கும் அதிகமான அப்பாவி மக்களை கொன்று குவித்து வருகிறது. இந்தக் கட்டுரையில் தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை சுருக்கமாகத் தருகிறோம். கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக இம்மக்கள் நடத்திவரும் வீர சுதந்திரப் போராட்டம் இன்று சர்வதேச சமுதாயத்தின் கவனத்தை ஈர்த்து வருகிறது.

தென்னாபிரிக்காவில் தாண்டவமாடும் ஒடுக்குமுறை "அபாதையிட்" (Apartheid) என அழைக்கப்படுகிறது. இவ் ஒடுக்குமுறை தென்னாபிரிக்க மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வை ஊடுருவிச் செல்கிறது. இந்த ஒடுக்குதல் முறை சாரம்சத்தில் நிறத்தை அடிப்படையாகக் கொண்ட இன வேறுபாட்டை குறித்து நிற்கிறது தொழில் துறை, கல்வித்துறை, நிர்வாகத் துறை மற்றும் சமூக வாழ்வில் கறுப்பு இன மக்களை வெள்ளையர்களிலிருந்து பிரித்து அன்னியமாக்குவதை இலக்காகக் கொண்டது இந்த ஒடுக்குமுறை. இந்நிற வேறுபாட்டு ஒடுக்குதல் முறை அடிப்படையில் 47 இட்சம் பேரைக்கொண்ட சிறு பான்மை வெள்ளையர்கள் இரண்டரைக் கோடிக்கும் மேற்பட்ட பெரும்பான்மை கறுப்பின மக்களை மிகவும் மோசமான முறையில் நசுக்கி வருகிறார்கள். தென்னாபிரிக்க பிரதேசத்தின் மைந்தர்களாகிய கறுப்பர்களின் இரத்தத்தையும், வியர்வையையும் உறிஞ்சி வாழும் இந்த வெள்ளையர்கள் கறுப்பு நிறத்தோரை அடிமைகளாக நடத்தி வருகிறார்கள்.

## வரலாற்றுச் சுருக்கம்

காலனித்துவ ஊடுருவலுக்கு முந்தியகால கட்டத்தில் தென்னாப்பிரிக்காவில் பல தேசிய இன மக்கள் பிரதேச சுயாட்சியுடன், தம்மத்தியில் பரஸ்பர நல்லுறவோடு ஒரு மத்திய நிர்வாக அமைப்பை உருவாக்கி செயல்பட்டு வந்தன. 1752ம் ஆண்டு மேற்கத்திய காலனித்துவம் தென்னாபிரிக்காவில் முதல் முறையாக காலடி எடுத்து வைத்தது. தென்னாபிரிக்காவின் நன்னம்பிக்கை முனையில் ஒல்லாந்தர்கள் தமதாதிக்கத்தை முதலில் நிறுவினர். ஒல்லாந்தர்களின் காலனியாதிக்கம் விரிவடையத் தொடங்க சுதேசிய கறுப்பு இன மக்கள் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர். இதனை அடுத்து ஒல்லாந்தர்களுக்கும் கறுப்பு மக்களுக்கும் மத்தியில் நீண்டகாலமாக யுத்தங்கள் நடந்து தென்னாபிரிக்காவின் வளம் நிறைந்த நிலங்களை ஒல்லாந்தர்கள் தம் வசமாக்கினர். பின் 1815ம் ஆண்டு நன்னம்பிக்கைமுனை பிரித்தானியர் வசம் வீழ்ந்தது. இதனை அடுத்து பிரித்தானியருக்கும் ஒல்லாந்தருக்கும் மத்தியில் யுத்தங்கள் வெடித்தன. எனினும் காலப் போக்கில் ஐரோப்பிய காலனித்துவ நலன்கள் கருதி ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் ஒன்றுசேர்ந்து கறுப்பின மக்களை நசுக்கத் தொடங்கினர். 1906ம் ஆண்டு ஆபிரிக்க மக்களின் இறுதிக் கிளர்ச்சி ஐரோப்பிய காலனிவாதிகளால் முற்றாக ஒடுக்கப்பட்டு தென்னாபிரிக்கப் பிரதேசமும் வெள்ளையர்களின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. இதனுடன் ***1910ம் ஆண்டு தாம் கைப்பற்றிய தென்னாபிரிக்கமாகாணங்களை ஒன்று சேர்த்து வெள்ளையர்கள் ஒரு சட்ட விரோத இனவாத அரசைப் பிரகடனப் படுத்தினர்.***

தென்னாபிரிக்கப் பிரதேசம் முற்றாக தமது அரசியல் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டதை அடுத்து வெள்ளை ஆட்சியாளர் தமது பொருளாதாரச்சுரண்டலைத் தொடங்கினர். தென்னாபிரிக்காவின் முக்கிய கனிவளங்களான தங்கம், வைரம் போன்றவற்றை தோண்டி எடுப்பதற்கான பாரிய சுரங்கங்கள் அமைக்கப்பட்டன. இச்சுரங்கங்களில் தொழில் புரிய வலுக்கட்டாயத்தின் பேரில் கறுப்பின மக்கள் தொழிலாளர்களாக அமர்த்தப்பட்டனர். காலப்போக்கில் விவசாய சமுதாயமாக இருந்த தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் தமது சொந்த நிலங்களை இழந்து, தமது விவசாய வாழ்க்கையை இழந்து அடிமைத் தொழிலாளர்களாக மாற்றப்பட்டனர்.

படிப்படியாக தென்னாபிரிக்க விவசாய சமுதாயம் மேற்கத்திய காலனித்துவ சுரண்டல் முறையின் தளமாக மாற்றப்பட்டு முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு இலக்காகியது இவ்வாறு அரசியல் அதிகாரத்தையும், பொருளாதார ஆதிக்கத்தையும் நிலைநாட்டிக் கொண்ட சிறுபான்மை வெள்ளை இனவாத ஆட்சியாளர் தமது சுரண்டல் முறையை நீடிக்கும் நோக்கத்தோடு மிகவும் மோசமான இனவாத சட்டங்களை அமுலுக்குக் கொண்டு வந்தனர். இந்தச் சட்டங்களின் தொகுப்பே "அபாதையிட்" எனப்படும் நிற ஒடுக்குதல் முறையை உருவாக்கியது.

இந்த இன ஒடுக்குதல் சட்டங்கள் கறுப்பின மக்களின் சகல மனித உரிமைகளையும் பறித்ததுடன் அவர்களை அவர்களது சொந்த மண்ணிலேயே அடிமையாக்கியது. இச் சட்டங்களின் பிரகாரம் கறுப்பின மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து,




ANC தலைவர் ஆலிவர் டாம்போ

பலவந்தமாக இடம் பெயர்க்கப்பட்டு வளமற்ற, வறண்ட வனாந்தரப் பிரதேசங்களில் கட்டாயமாக குடியமர்த்தப்பட்டனர்.

அத்தோடு இம்மக்கள் தமது நாட்டினுள் தாம் விரும்பியபடி பிரயாணம் செய்வதற்கும் வெள்ளை இன மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு செல்வதற்கும் தடை செய்யப்பட்டனர். இவ்வாறு நிற அடிப்படையில் மிகவும் அநீதியான சட்டங்களையும் பிறப்பித்து தென்னாபிரிக்க இனவெறி இம்மக்களை அரசு மிகவும் கொடுமையான அடக்குமுறைக்கு ஆளாக்கியது.

## ஆபிரிக்க விடுதலை இயக்கத்தின் தோற்றம்

இவ்வாறு அரசியல் உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டு மிகவும் மோசமான பொருளாதார சுரண்டல் முறைக்கு ஆளாக்கப்பட்ட பெரும்பான்மை மக்கள் தமது உரிமைகளை மீட்டெடுக்க ஒரு அரசியல் இயக்கத்தை உருவாக்க விளைந்தனர். இந்தத் தேவையின் அடிப்படையில் 1912ம் ஆண்டு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தோற்றம் கண்டது. ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அகிம்சை வழியில் தனது அரசியல் போராட்டத்தை முன்னெடுத்தது. உரிமைகள், சலுகைகள் வேண்டி, அரசாங்கத்திடம் கோரிக்கைகளை முன் வைத்தது. ஆனால் தென்னாபிரிக்க இனவாத அரசோ இவ்வியக்கத்தின் கோரிக்கைகளை முற்றாக நிராகரித்ததுடன் அடக்குமுறையை மேலும்




தீவிரப்படுத்தியது. இதனால் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் காந்தீயப் பாதை எவ்வித அரசியல் தாக்கத்தையும் விளைவிக்கவில்லை. மக்களும் இவ்வியக்கத்தில் நம்பிக்கை இழக்கத் தொடங்கினர்.

1944ம் ஆண்டு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இளைஞர் பேரவை உதயமாகியது. இந்த இளைஞர் பேரவையில் முற்போக்கான, தீவிரமிக்க ஒரு புதிய பரம்பரை தோற்றம் கொண்டது. இந்த இளைஞர் அணி அரசியல் போராட்டத்தில் ஒரு புதிய அணுகுமுறையையும், புதிய கொள்கைத் திட்டத்தையும் ஆபிரிக்க தேசிய காங்கிரசை புதிய பாதையில் வழிநடத்த செய்தது. இந்த இளைஞர் அணியில் இருந்துதான் இன்றைய புரட்சித்தலைவர்களான நெல்சன் மண்டெலா, ஒலிவர் தம்போ போன்றோர் தோன்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இதனால் புத்துயிர் பெற்று ஒரு தேசிய விடுதலை இயக்கமாகப் பரிணமம் பெற்றது. தேசிய ரீதியில், பரந்துபட்ட வெகுசனங்களை அணிதிரட்டி தென்னாபிரிக்க இனவெறி அரசுக்கெதிராக மக்கள் போராட்டங்களை முடுக்கிவிட்டது. வேலை நிறுத்தங்கள் ஆர்ப்பாட்டங்களாக வெடித்த இந்த வெகுஜனப் போராட்டங்களில் ஆயிரம் ஆயிரம் கறுப்பின மக்கள் பங்குபற்றினர். 1952ம் ஆண்டு தென்னாபிரிக்க இனவெறி அரசுக்கெதிராக ***"ஒத்துழையாமை இயக்கத்தை"*** ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஆரம்பித்து போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தியது. அதே வேளை தென்னாபிரிக்க அரசும் இந்த தேசிய சுதந்திர எழுச்சிக்கெதிராக மிகவும் கொடூரமான அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது. 8000க்கு மேற்பட்ட போராளிகள் கைது செய்யப்பட்டு இறுதியில் ஒத்துழையாமை இயக்கம் மிருகத்தனமான முறையில் நசுக்கப்பட்டது.

## தேசிய சுதந்திர சாசனம்

26-யூன்-1955ம் ஆண்டு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தனது வருடாந்த மகாநாட்டில் ஒரு தேசிய சுதந்திர சாசனத்தைப் பிரகடனம் செய்தது. ஒரு சுதந்திர ஜனநாயக அரசுக்கான வேலைத்திட்டமாக இந்த சுதந்திர சாசனம் அமைந்தது. **தென்னாபிரிக்கா அதன் மக்களுக்கே சொந்தமாக்கப்பட வேண்டும். இன நிற வேறுபாடற்ற** மக்களால் தெளிவு செய்யப்பட்ட ஜனநாயக அரசு நிறுவப்பட வேண்டும், தேசிய செல்வம் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை அந்தச் சாசனம் **எடுத்தியம்பியது.** இனவாத அரச அமைப்பு கலைக்கப்பட வேண்டுமென்றும் அதற்காக வெகுசனப் போராட்டங்கள் தீர்க்கமான முறையில்



பொருளாதாரத்தை நாசமாக்குமுகமாக எண்ணெய் கி



*1976-ம் ஆண்டு கிளர்ச்சியின்போது ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தப் படங்கள் 16-6-76 அன்று சவேட்டோ என*





# ...தலைப் போராட்டம்



...ங்களை கெரில்லாக்கள் அழித்தனர்.



நடத்தப்பட வேண்டுமென்பதும் இச்சாசனத்தில் தெரிவிக்கப் பட்டது.

இச்சுதந்திர சாசனத்தை வென்றெடுக்கு முகமாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் நாடு பூராவும் வெகுசனப் போராட்டங்களை நடத்தியது. தேசிய ரீதியில் கிளர்ச்சிகளும் ஆர்ப்பாட்டங் களும் வெடித்தன. இதன் உச்சக் கட்டமாக **1960ம் ஆண்டு மார்ச் 21ம் திகதி "சார்ப் வில்" (Sharpeville) எனும் நகரத்தில் சாத்வீக ஒத்துழை யாமை எதிர்ப்பியக்கம் நடை பெற்றது.** இதில் 20,000 மக்கள் வரை கலந்துகொண்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தின்போது பொலி சார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். 67 அப்பாவிக் கறுப் பின மக்களைச் சுட்டுக் கொன்ற னர். இப்படுகொலைச் சம்பவம் நாடெங்கிலும் பெரும் கிளர்ச்சி களை ஏற்படுத்தியது. ஆயினும் தென்னாபிரிக்க இனவெறி அரசு அவசர கால சட்டத்தைப் பிறப் பித்து மிகவும் மிருகத்தனமான முறையில் கிளர்ச்சிகளை நசுக்கி யது. அத்தோடு **ஆபிரிக்க தேசிய காங்கிரசை தடை செய்யப்பட்ட இயக்கமாகப் பிரகடனப்படுத்தியது.** ஆபி ரிக்க தேசிய காங்கிரசின் அரசி யல் தொண்டர்கள் ஆயிரக்கணக் கில் கைது செய்யப்பட்டு சிறை யில் அடைக்கப்பட்டனர். இதனை அடுத்து ஆ.தே.கா. தலைமறைவு இயக்கமாக இயங்கத் தொடங் கியது.

## தேசியத்தின் ஈட்டி

## (Spear of the Nation)

**ஆயுத பலாத்கார அடக்கு முறைகளுக்கெதிராக சாத்வீக சமாதான போராட்ட வடிவங் கள் பயன் அளிக்காது என் பதை ஆ.தே.கா. உணர்ந்து கொண்டது. தார்மீகமும், மனித தர்மமும் அற்ற இன வெறி பிடித்த ஒரு அரசுக்கெதி ராக காந்தியப் பாதை வெற்றி யளிக்காது என்பதை இந்த கறுப்பின விடுதலை இயக்கம் புரிந்துகொண்டது. ஆயுத பலாத்காரத்தை ஆயுதத் தாலேயே முறியடிக்க வேண்டு மென்ற உண்மையை கறுப் பர்கள் புரிந்துகொண்டனர். இந்த அரசியல் விழிப்புணர் வின் அடிப்படையில் 1961ம் ஆண்டு ஆ. தே. காங்கிரஸ் தனது இராணுவ அமைப்பை உருவாக்கியது. தமது தேசிய போர்ச் சின்னமாகிய ஈட்டியை குறியீடாகக் கொண்டு "தேசியத்தின் ஈட்டி" என்ற பெயரில் இந்த இராணுவ அமைப்பு உருவாக் கப்பட்டது. நெல்சன் மண் டேலா இந்த இராணுவ அணிக்குத் தளபதியானர்.**

1961ம் ஆண்டு டிசம்பர் 14ம் திகதி ஆ. தே. காங்கிரசின் இரா ணுவ அணியான "தேசியத்தின் ஈட்டி" வெளியிட்டுள்ள கொள்



நெல்சன் மண்டேலா

கைப் பிரகடனத்தில் பின்வரு மாறு குறிப்பிடுகிறது.

**1. அடிமைகளாக அடிபணிந்து கொள்வதா அல்லது விடுதலைக் காக போராடுவதா? என்ற விடயத்தில் ஒரு முடிவு எடுக்க வேண்டிய வரலாற்று சூழ்நிலை ஒவ்வொரு நாட்டு மக்களுக் கும் எழுவதுண்டு. இந்த இக்கட்டான சூழ்நிலை எமக் கும் ஏற்பட்டு இருக்கிறது. நாம் ஒருபோதும் அடிமை களாக அடிபணிந்து வாழப் போவதில்லை. எமது சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டி எதிரியோடு போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழி யில்லை.**

**2. இதுவரை காலமும் சமா தான வழி தழுவிய சாத்வீகப் போராட்டங்களை தென்னாபி ரிக்க அரசு தவறாக எடை போட்டுள்ளது. சமாதானப் பாதையை மக்களின் பலவீன மெனக் கருதி பலாத்காரத்தை தீவிரப்படுத்தியது. ஆகவே இந்தப் பழைய பாதையைக் கைவிட்டு தேசியத்தின் ஈட்டி யானது ஒரு புதிய புரட்சிகரப் பாதையை தழுவிக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.**

**3. இனிமேல் அரசாங்கத்தின் பலாத்கார அடக்குமுறையை நாம் பலாத்காரம் மூலமே எதிர்கொள்வோம். ஒடுக்கப் படும் எமது மக்களின் போரா யுதமாக எமது இயக்கம். இயங்கும்.**

தேசியத்தின் ஈட்டியாகிய தென்னாபிரிக்க விடுதலை இயக் கத்தின் இராணுவ அணி கெரில் லாப் போர்முறையையே தனது ஆயுதப் போர் வடிவமாக நெறி யாகக் கொண்டது. தென்னா



பிரிக்க அரசின் பொருளாதார பலத்தை முறியடிக்கும் நோக்கில் நாசகாரச் செயல்களை தமது போர்த் தந்திரமாக இராணுவ அணி கையாண்டது. 1961 டிசம்பர் மாதத்தில் இருந்து 63 மே வரை 200க்கு மேற்பட்ட நாசகாரச் சம்பவங்களை இந்தக் கெரில்லா இயக்கம் மேற்கொண் டது. இந்த ஆயுதப் போர் நடவடிக்கையால் நிலைகுலைந்த தென்னாபிரிக்க அரசு மிகக் கொடூர மான முறையில் அடக்கு முறையை கட்டவிழ்த்துவிட்டது. இதன் **விளைவாக** திரு நெல்சன் மண்டேலா உட்பட பல முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்டனர். இந்த அடக்குமுறை காரண மாகவும், தலைவர்கள் கைது செய்யப்பட்டதாலும் நீண்ட காலத்திற்கு ஆயுதப் போராட் டத்தில் ஒரு ஸ்தம்பித நிலை ஏற்பட்டது. ஆயுதம் பெறுவதில் இருந்து வந்த **கஷ்ட** நிலை, மக்கள் இடத்திற்கிடம் செல்ல முடியாத சூழ்நிலை, எல்லை நாடு களாக அங்கோலா, மொசாம்பிக், போர்த்துக்கீச **காலனித்துவத்** தின் கீழ் இருந்தமை ஆகிய காரணிகளும் ஆயுதப் போராட் டத்தை விஸ்தரிப்பதற்கு இடை யூறாக இருந்தன. ஆனால் 1976ம் ஆண்டுக்குப்பின் நிலைமை முற்றாக மாறியது. போர்த்துக்கீச **காலனித்துவ** ஆதிக்கத்தின் கீழ் இருந்த எல்லை நாடுகள் விடுதலை பெற்றதும் தென்னா பிரிக்க கெரில்லாக்கள் அங்கோலா, மொசாம்பிக் போன்ற நாடுகளில் பயிற்சித் தளங்களை அமைத்து கொள்ள முடிந்தது. அதேவேளை லிபியா, சீனா போன்ற நாடுகளும் கெரில்லாக்களுக்கு ஆயுத உதவி கள் வழங்கின.

1976ம் ஆண்டில் இருந்து 1979வரை தென்னாபிரிக்க கெரில்லாக்கள் அரசுக் கெதிராக 50க்கு மேற்பட்ட தாக்குதல்களை நடத்தினர்கள். 80ல் இருந்து ஆயுதப் போராட்டம் மேலும் விஸ்தரிக்கத் தொடங்கியது.

இதில் முக்கிய நாசகார நட வடிக்கைகளாக பல எண்ணெய்க் குதங்கள் மின்சக்தி நிலையங் கள், சுரங்கங்கள் நாசமாக்கப் பட்டன. இராணுவ தளங்களும், கேந்திர புகையிரத நிலையங்கள் போன்றவையும் கெரில்லாக்களின் தாக்குதல்களுக்கு இலக்காகியது.

கெரில்லாப் போராட்டம் தீவிர மடைந்து வரும் அதேவேளை வெகுசன அரங்கிலும் போராட் டங்கள் தலைதூக்கத் தொடங்கின. அரசாங்கத்தின் இன பாகுபாட் டுக் கொள்கைக்கெதிராக காலத் துக்குக் காலம் பரவலாக பெரும் எதிர்ப்புகள், ஆர்ப்பாட்டங்கள், குமுறி வந்தன. இவற்றில் (Soweto) **சொவேற்றோ நக ரில் 1976ல் நடைபெற்ற கிளர்ச்சி குறிப்பிடத்தக்கது. அரச இனவாதக் கொள்கை களுக்கெதிராக பாடசாலை மாணவ, மாணவிகள் பெரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத் தினர். இவ்வார்ப்பாட்டத்தின் போது 252 பள்ளிச் சிறுவர்கள் பொலிசாரால் சுட்டுக் கொல் லப்பட்டதுடன் 2000க்கும் மேற்பட்டோர் காயம் அடைந் தனர்.**


இந்த அப்பாவிப் பள்ளிச் சிறு வர்கள் படுகொலை செய்யப்பட்ட இச்சம்பவம் தென்னாபிரிக்கா அடங்கிலும் பெரும் கொந்த ளிப்பை எழுப்பியதுடன் உலக சமுதாயமும் கண்டனத்தைத் தெரிவித்தது.

**தென்னாபிரிக்காவின் இந்த எதேச்சதிகாரப் போக்கிற்கு காரணம் மேற்கத்தைய முதலாளித்துவ நாடுகள் அதற்கு வழங்கிவரும் ஆதரவு தான். தென்னாபிரிக்கா ஆபிரிக்கக் கண்டத்தின் முதலாளித்துவ தளமாக விளங்குகிறது. தென் ஆபிரிக் காவில் பெறப்படும் தங்கம், வைரம், செம்பு மற்றும் யூரேனியம் போன்ற கனி வளங்கள் மேற்கத்தைய முதலாளித்துவ நாடுகளுக்கு இன்றியமையாததாகும்.** இத னால் மேற்கத்திய ஏகாதிபத்திய வல்லரசுகள் தென்னாபிரிக்காவின் இனவாதத்துக்குத் தூபமிட்டுக் கொண்டு அந்நாட்டுக்கு பெரு மளவு ஆயுத உதவிகளைச் செய்து வருகின்றன. **தென்னாபிரிக்க அரசானது தனது உள்நாட்டு சுதேசிய மக்களை அடிமைப் படுத்தி வைத்திருப்பதுடன் தனது அயல்நாடான நமீபி யாவையும் தனது ஆதிக்கத் தின் கீழ் வைத்து இருக்கிறது. அத்தோடு சுதந்திரம் பெற்ற அங்கோலாவிற்குள் ஊடுருவி அங்கோலா மக்களின் சுதந்திர வாழ்க் கைக்குப் பெரும் அச்சுறுத்த லாக விளங்கி வருகிறது.**

ஐ. நா.வும் உலக சமுதாயமும் எதிர்ப்பு தெரிவித்தபோதும் அமெரிக்காவின் ஆதரவோடு தென்னாபிரிக்க இனவாத அர சானது ஆபிரிக்க கறுப்பின மக்களை கொடூரமாக ஒடுக்கி வருகிறது. கடந்த சில மாதங் களாக தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் அரசுக்கெதிரான கிளர்ச்சி களை நடத்திவருகின்றனர். **கடந்த மார்ச் மாதம் 1960ம் ஆண்டு நடைபெற்ற "சார்ப் வில் படுகொலை"களின் 25-வது வருட ஞாபகார்த்த தினத்தை ஒட்டிமக்கள் ஆர்ப்பரித்தபோது தென்னாபிரிக்கப் பொலிசார் மிகவும் குரூரமான முறையில் அடக்குமுறையை கட்ட விழ்த்துவிட்டனர். பொலிசார் சுட்டதில் 50க்கும் அதிகமான அப்பாவி மக்கள் கொல்லப் பட்டனர். ஆனால் மக்களின் கிளர்ச்சியோ தொடர்கிறது. ஆயுத அடக்குமுறையால் எந்த ஒரு மக்கள் சமூகத்தை யும் அடக்கி ஒடுக்க முடியாது என்ற வரலாற்று உண் மையை தென்னாபிரிக்க-அரசு என்றோ ஒரு காலம் உணர்ந்து கொள்ளும் என்பதில் ஐய மில்லை.**

...ற இடத்தில் கிளர்ச்சியை ஆரம்பித்த மாணவர்களையும், அவர்களைச் சுடும் போலிஸாரையும், சடலங்கள் மீட்கப்படும் காட்சியையும் காட்டுகின்றன.







# சிங்கள அரசின் நாசகாரச் சதி

தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று புதிய பரிமாணத்தைப் பெற்றுவருகிறது. எமது புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை ஒரு சில இளைஞர்களின் ''பயங்கரவாதச்'' செயல்களெனக் கூறிவந்த ஸ்ரீலங்கா அரசு எமது பலமான தாக்குதலையும், உறுதியான வளர்ச்சியையும் கண்டு திகிலடைந்து உள்ளது. ஆயுத பலத்தாலும் தனது கூலிப் படையினராலும் தமிழீழ தேசிய விடுதலைப் போராளிகளை அழித்துவிடலாம் என கருதி வந்த அரசு தனக்கு ஏற்பட்டு வரும் தோல்வியை மறைக்க முயன்று வருகிறது.

சர்வதேசப் பயங்கரவாதிகளின் கூட்டில் இணைந்து வரும் சிங்கள அரசு உலக நாசகார சக்தியாகிய ''மொசாட்டின்'' ஆலோசனையோடு தமிழீழ மக்களைப் பிரித்து, மோதவிட்டு, அழிக்க முனைந்துள்ளது. எம்மில் பிரிக்க முடியாத அங்கமாக இருந்துவரும் இஸ்லாமியத் தமிழர்களுக்கு நாம் எதிராக இயங்குகிறோம் என்ற மாயையை ஏற்படுத்தி அதனூடாக தனது எண்ணத்தை நிறைவேற்ற முயலுகிறது. கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டுவரும் காடைத்தனத்துக்கு இதுவே காரணமாகும். தமிழர்கள் என்ற காரணத்தால் மன்னாரில் முஸ்லீம் மக்களது வியாபாரத் தலங்களை எரித்தும், திகவாப்பிய பிரதேசத்தில் குடியிருந்த முஸ்லீம் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களைப் பறித்து சிங்கள மக்களைக் குடியேற்றியும் வரும் சிங்கள பேரினவாத அரசு முஸ்லீம் மக்களை தமிழ் மக்களுக்கெதிராகத் தூண்டிவிட முனைந்து வருகிறது.

தனது கூலிப் படையையும், வெளியில் இருந்து இறக்கப்பட்ட குண்டர்களையும் கொண்டு திட்டமிட்ட அடிப்படையில் பொய்யான செய்திகளைப் பரப்பி அப்பாவித் தமிழர்களைக் கொன்றும், பல்லாயிரக்கணக்கான வீடுகளைக் கொளுத்தியும் தமிழர்களை தமது பிரதேசங்களிலிருந்து அகதிகளாக வெளியேற்றி வருகிறது. இந் நாசகாரச் செயலின் சூத்திரதாரிகள் அரசும், அரசின் படையினருமே என்பதை அமைச்சக மட்டத்திலுள்ளோரே வெளிப்படையாகக் கூறியுள்ளனர்.

தோல்வியின் விளிம்பில் விழுந்துகொண்டு இருக்கும் சிங்கள அரசு இவ்வாறான சதி முயற்சிகளில் ஈடுபடுவது சகஜம். நாம் இந் நாசகாரச் செயல்களின் காரணகர்த்தாக்கள் யாரென்பதையும், உண்மையான இன விரோதிகள் யாரென்பதையும் கண்டு அவர்களுக்கெதிராக எமது விடுதலைப் போராட்டத்தை நடத்திச் செல்லவேண்டும்.

இச்சதி நடவடிக்கையைக் கண்டித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழப்புரட்சி அமைப்பு ஆகியன கூட்டாக விடுத்த அறிக்கை வருமாறு.

''ஈழத்துத் தமிழ் பேசும் மக்களிடையே பிளவை ஏற்படுத்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்தை திசைதிருப்பும் நோக்கத்தோடு ஸ்ரீலங்கா அரசு மத அடிப்படையில் மோதல்களைத் தூண்டி வருகிறது. கடந்த சில நாட்களாக இலங்கையின் கிழக்குப் பகுதிகளில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் சிங்கள இனவாத அரசின் நாசகார சதி முயற்சியால் உருவாக்கப்பட்டவையாகும். இஸ்ரேலிய உளவு ஸ்தாபனமாகிய ''மொசாட்டின்'' சதியாலோசனையோடு இந்நாசகாரத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இஸ்லாமின் விரோதியான இஸ்ரேலுடன் கைகோர்த்துக்கொண்டு இருக்கும் ஸ்ரீலங்கா அரசு தமிழீழ விடுதலைப் போராளிகளை முஸ்லீம் மக்களுக்கு எதிரானவர்கள் என்ற ரீதியில் விசமப்பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறது. இஸ்லாமிய சமூகத்தில் இருந்து எம்மை அன்னியப்படுத்தும் நோக்கில் கட்டவிழ்த்துவிடப்படும் இந்தப் பிரச்சாரம் அபாண்டமானதோடு மிகவும் கேலிக்கூத்தானதாகும்.

விடுதலை இயக்கங்களின் ஆக்கபூர்வமான முயற்சிகளால் முஸ்லீம் மக்களுக்கும் ஏனைய தமிழ் பேசும் மக்களுக்குமிடையே உறவுகள் வலுப்பெற்று வந்தன. முஸ்லீம் மக்களிடம் இருந்து விடுதலைப் போராட்டத்திற்கு மேலும் மேலும் ஆதரவு திரண்டு வந்தது. இதனைக் கண்ட ஸ்ரீலங்கா ஆட்சியாளர்கள் திகிலடைந்தனர். இஸ்ரேலுடன் ஸ்ரீலங்கா அரசு நட்புறவு கொண்டமையால் ஆத்திரம் அடைந்த அரபு நாடுகள் தமது உதவியை நிறுத்தி வருகின்றன. பாரந்துபட்ட முஸ்லீம் மக்களிடையே வளர்ந்துவரும் ''சியோனிச'' எதிர்ப்புணர்வை திசை திருப்புவதற்கும் எமது விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்கும் முஸ்லீம் நாடுகளில் இருந்து உதவியைப் பெறுவதற்குமாகவே சிங்கள பௌத்த இனவாத அரசு திட்டமிட்டு இந்த மோதலைத் தூண்டி வருகின்றது.

கடந்த வருடம் ஸ்ரீலங்கா அரசு எமது போராட்டத்தை நசுக்கும் நோக்குடன் இஸ்ரேலின் உதவியை நாடி இராஜதந்திர உறவை ஏற்படுத்தியபோது முஸ்லீம் மக்கள் அதற்கெதிராக கிளர்ந்தெழுந்தனர். கிழக்கிலங்கையில் பாலஸ்தீன போராட்டம் வெடித்தது. இதை சகித்துக் கொள்ள முடியாத சிங்கள ஆட்சியாளர் அடக்குமுறை மூலம் அப் போராட்டங்களை மிருகத்தனமாக நசுக்க முயன்றனர் என்பதை முஸ்லீம் மக்கள் நன்கறிவர்.

பாலஸ்தீன மக்களின் நிலங்களை அபகரித்து, அவர்களை அகதிகளாக்கி மனித குலத்தின் வெறுப்புக்கு ஆளாகியுள்ள இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளருடன் ஸ்ரீலங்கா அரசு கூடிக் குலாவுகின்றது. பாலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டத்தை உறுதியாக ஆதரித்துவரும் தமிழீழ விடுதலைப் போராளிகளை முஸ்லீம் மக்களுக்கு எதிரான வன்முறையாளர்கள் என்று சித்திரிக்க முயற்சிக்கும் சிங்கள அரசின் சதித்திட்டம் ஒருபோதும் வெற்றிபெறப் போவதில்லை. மத அடிப்படையில் தமிழ் மக்களைப் பிளவுபடுத்த ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளும் சதி முயற்சிகளுக்கு பலியாகாது விழிப்பாக இருக்குமாறு நாம் தமிழ் பேசும் மக்களைக் கேட்டுக்கொள்கிறோம்

மத வேறுபாட்டுணர்ச்சியின்றி ஈழத் தமிழ் பேசும் மக்களிடையே காலம் காலமாக நிலவிவரும் பிரிக்க முடியாத உணர்வுகளை தொடர்ந்தும் பேணிப் பலப்படுத்தி எமது விடுதலையை வென்றெடுக்க உறுதியுடன் செயற்படுவோமாக.

---





## இன்னும் எலும்புகள்

எனது கதவைத் தட்டிக் கேட்காதே எதுவும்.
மரணத்தால் விறைத்திருக்கிறது என் வீடு.
......................
இந்த நாட்கள்
காக்கிநிறப் பேய்களால் நிர்வகிக்கப்படுகின்றன.

இன்று
பூக்களும் பறவைகளும்
குழந்தைகளின் புன்னகைகளும்
பெண்களும் எரிந்து போயினர்.
உறுப்புகள் வெட்டப்பட்டவர்களின் குரல்கள்
வெளிகளில் தடுமாறுகின்றன.
பிணங்களின் நடுவில் நொறுங்கும்
புத்தனின் மண்டை யோட்டிலிருந்து
கழுகுகள் அலறுகின்றன.

கடவுள் மொழி இனம் என்று
துருப்பிடித்த தகரத்தால்
உன் தொண்டையை அறுப்பது சுலபம்—இன்று
மனிதனாக இருப்பது குற்றம்.

பூமி—எலும்புக் கூடுகளின் தாழ்வாரம்
(எலும்புகள் இன்னும் குவிகின்றன)
காற்று—வெடிமருந்துப் புகைகளின் கிடங்கு
(புகைகள் இன்னும் அடர்கின்றன)
மணலில் பதியும் ஒவ்வொரு சுவட்டிலும்
ரத்தமும் சீழும் படிகின்றன.

சிலந்திகள் பின்னிய வலையில்
சரித்திரத்தின் ஆந்தைக் கண்கள்
வெறுமையாய் உறையும்.
......................
எனது கதவைத் தட்டிக் கேட்காதே எதுவும்
இன்று
மனிதனாக இருப்பதே குற்றம்.

— சுமான்

## இருபத்திநாலு மணிநேர இரவு

பகலைச்
சட்டபூர்வமாகச் சதுரமிட்ட
ஜன்னல்களில்
நடு நிசியின் ரௌடி நிழல்கள்.
பதுங்காமல்
பவிஷுடன் பவனிவரும்
ஓநாய்ப் பற்களுக்கு
இரும்பு வளைவுகளாய்
ராணுவப் பாதுகாப்பு
இருமை தாண்ட விரதமெடுத்துத்
தலைமழித்த பிக்ஷு மடத்தில்
மலர்ச் செடிச் சிலிர்ப்புகள் கூட
ராக்ஷஸத் தலைப் பரட்டைகளாகின்றன.

குழந்தை வீறிடுகிறுள்.

நாளாந்த நாகரீகத்தின்
ஒளிச்சதுரம் உடைந்து
வீட்டினுள் சிதறுகிறது
சட்டத்தின் கரம் எறிந்த
பெட்ரோல் வெடி.

பீதியின் எல்லை.

குழந்தைமை கற்பிழந்து
பயங்கரம் முதிர்கிறது.

உலகின் ஊமைச் சட்டங்கள்
வீறிட்டு அழும்
பெண் குரலைச் சுற்றி
உதவியற்ற
அமைதிப் பிராத்தியமாகின்றன.
விடிவின் திசையற்று
ஒரு சமூகத்தின்
உயிரைச் சூழ்கிறது
இருபத்தி நாலு மணிநேர
இருள்.

கண்முன்னுல் தாய்தங்கை
கழுத்தறுபடக் கண்டவனின்
பிஞ்சுக் கை பிடித்த
துப்பாக்கி இரும்பில் மட்டும்
நக்ஷத்ரங்களின்
ஒளிக் கண்ணீர்த்துளி ஒன்று
உதயத்தை நோக்கிப்
பிரவஹிக்கிறது
நெருப்பாக.........

# உணவு உற்பத்திப் போரில் புலிகள்

ஸ்ரீலங்கா பௌத்த பேரின வாதம் தமிழீழ மக்களின் வாழ்வைச் சீர்குலைத்துள்ளது. பௌத்த பேரினவாதம் செயல்படுத்தும் தமிழின ஒழிப்பின் முக்கிய அம்சங்களாக வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களில் இருந்து புறக்கணித்தல், தமிழீழ பிரதேச வளங்களைச் ஸ்ரீலங்காவிற்கு அள்ளிச் செல்லல் (மீன்பிடி, காங்கேசன் துறை சீமேந்து) போன்ற பொருளாதார பாரபட்ச நடவடிக்கைகளை கூறலாம். எமது தமிழீழ தாயகம் நம் வாழ்க்கைக்கான அடிப்படை வளங்களைக் கொண்டுள்ளது. நாம் அனுபவிக்கும் பிரச்சனைகள் செயற்கையாகத் தோற்றுவிக்கப்பட்டவையாகும். பிரித்தானிய காலனித்துவ ஆதிக்கத்தின் விளைவாகவும், நவ காலனித்துவத்துடன் கூடிய பௌத்த சிங்களப் பேரின வாதத்தின் பிரதிபலிப்பாகவும் தோன்றியுள்ள பல்வேறு பிரச்சனைகளினது வெளிப்பாடே இப் பொருளாதார முடக்கல் பிரச்சனையாகும்.

அடக்குமுறைக்கு எதிரான உலகளாவிய விடுதலைப் போராட்டங்களில் அடக்குமுறையாளனின் ஒடுக்குமுறைகள் பல வடிவத்தில் தோற்றம் பெறுகின்றன. போராட்டத்தை ஒடுக்க எதிரி பல வழிகளை கையாளுகிறான்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பொறுத்தவரையில் எமது எதிரி ஒரு தீவிர இன வெறியன் மிகக் கொடூரமான அடக்கு முறைச் சட்டங்களை ஏற்படுத்துவதும், யுத்த தர்மம் இன்றி அப்பாவி மக்களைக் கொன்று குவிப்பதுமே அவனது நாளாந்த செயற்பாடாயுள்ளது.

விடுதலைப் போராட்டம் வளர்ச்சிக் கட்டங்களினூடாக விஸ்தரிக்கப்பட்டு வரும் இன்றைய சூழ்நிலையில் பொருளாதார ரீதியான நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்த முனைவான். அதிலும் குறிப்பாக "பட்டினிச் சாவை" ஏற்படுத்தி போராட்டத்தின் மீது வெறுப்பையும் விரக்தியையும் தோற்றுவிக்க முயலுவான்.

இந்த வழிகளில் எமது போராட்டத்தை பொருளாதார ரீதியாக ஒடுக்கும் முதல் நடவடிக்கையாக எமது பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகள் யாவும் முற்றாக கைவிடப்பட்டது. எமது அபிவிருத்திக்கான நிதிகள் யாவும் இராணுவ செலவினங்களுக்கு பயன்படத் தொடங்கியது. இன்று "வீதிகள் திருத்துதல்" போன்ற அத்தியாவசிய தேவைகள் கூட தடை விதிக்கப்பட்ட ஒன்றும் இருப்பது கொடூரமான பொருளாதார நெருக்கடியை தோற்றுவிக்க எடுக்கப்பட்டிருக்கும் ஆரம்பப் படிகளாகும்.

இன்றைய சூழ்நிலையில் எரிபொருள் தட்டுப்பாடும் போக்குவரத்து வசதியின்மையும் காரணமாக, பல்வேறு தொழில்களும் உற்பத்திகளும் பாதிக்கப்பட்டுள்ளன. உணவு ரீதியில் உணவுப் பற்றாக்குறை ஏற்படுத்தப்பட்டிருப்பதும், மீன் பிடித் தொழில் போன்ற தொழில்கள் தடை விதிக்கப்பட்டிருப்பதும், இனவெறி அரசின் திட்டமிட்ட "உணவு நெருக்கடியை" தோற்றுவிக்கும் நடவடிக்கையாகும்.

இவற்றில் இருந்து நாம் விடுபட, விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க, எமது மழலைச் செல்வங்களை சின்னஞ் சிறுசுகளை "பட்டினிச் சாவில்" இருந்து பாதுகாக்க நாம் உயிர் வாழ அத்தியாவசியமான உணவு உற்பத்தியில் ஈடுபட வேண்டும்.

உணவு உற்பத்தியில் தாவர உற்பத்தியும் கால்நடை வளர்ப்பும் முக்கியமானதாகும். தாவர உற்பத்தியில் மரவள்ளி, சீனி வற்றாளை, இராசவள்ளி போன்ற கிழங்கு வகைகளையும், பயறு, உழுந்து, கௌபி, சோயா அவரை போன்ற அவரை வினப் பயிர்களையும் சோளம், தினை, சாமை, குரக்கன் போன்ற உப தானியப் பயிர்களையும், காய் கறி வகைகளையும், பழ வர்க்கங்களையும் பயிரிடவேண்டும். இவற்றோடு குடாநாட்டு விறகுத் தேவையை பூர்த்தி செய்ய இப்பில், சவுக்கு போன்றவற்றின் உற்பத்தியிலும் பனை, தென்னை போன்ற வளங்களின் பாதுகாப்பிலும் ஈடுபட வேண்டும். கால்நடை வளர்ப்பில் முயல், பன்றி, ஆடு, மாடு, தாரா, கோழி போன்றன வீட்டு மட்டத்தில் வளர்க்கக்கூடியன.

மேலும் பணப் பயிர்களான புகையிலை, வெங்காயம், மிளகாய் போன்றவற்றை இயன்ற வரையில் கட்டுப்படுத்தி தமிழ் மக்களை பட்டினிச் சாவில் இருந்து பாதுகாக்க, உணவுப் பயிர்ச் செய்கையில் கூடிய கவனம் செலுத்தவேண்டிய சூழ்நிலையில் உள்ளோம். போராட்ட காலத்தில் புகையிலை, வெங்காயம், மிளகாய் போன்றவற்றை தனியே உணவாக உட்கொள்ளவோ அன்றி சிறிலங்காவிற்கு ஏற்றுமதி செய்யவோ சாத்தியப்படாது தோன்றுகும்.

இப் பொருளாதார உணவு நெருக்கடி நிலைமையினைப் பற்றி நாம் ஆய்வு ரீதியாக "உணவு ஆதாரம் உயர உழைப்போம்" எனும் புத்தக வெளியீட்டின் மூலம் சுட்டிக் காட்டியிருந்தோம்.

இன்று எமது இயக்க உணவு உற்பத்திக் குழு தாவர உற்பத்தியிலும், கால் நடை வளர்ப்பிலும் வேறு பல வழிகளிலும் முழு உழைப்புடன் செயலாற்றி வருகின்றது. உணவு உற்பத்திக் குழு உறுப்பினர்கள் கிராம ரீதியாக வீடுகள்தோறும் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான விதைகள், நாற்றுகள், நாற்றுத் தடிகள் (மரவள்ளிபோன்றன) பழ வகைகள் (வாழை, மா, பலா போன்றன), சிறு தானியங்கள் அவரையின வித்துகள் போன்றவற்றை வழங்கி வருகிறார்கள். வீட்டு மட்டத்தில் வளர்க்கும் கால்நடைகளை வழங்கியும் காளான் உற்பத்தியிலும் விறகுத் தேவையைப் பூர்த்தி செய்யும் மரங்களை வழங்கியும் தென்னை உற்பத்தியிலும் வேறு பல வகைப்பட்ட உதவிகளையும் செய்து வருகிறார்கள்.


இவ் உணவு உற்பத்திக் குழுவின் முழுப் பயன்பாட்டையும் பெற்று அதற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து உணவு உற்பத்திப் போரை வெற்றிகரமாக முன்னெடுக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பல்வேறு நாட்டு விடுதலைப் போராட்டங்களில் பட்டினியால் பெருந் தொகையான மக்கள் செத்து மடிந்ததையாலும், தமது நாட்டை விட்டு வெளிநாடுகளில் குடியேறத் தொடங்கியமையாலும் அந்த நாட்டு விடுதலைப் போராட்டங்கள் தோல்வியுற்றதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

பல்வேறு சுமைகளையும், சவால்களையும் ஏற்று வியட்னாமியர் விடுதலை பெற்றதை நாம் மறந்துவிட முடியாது. வியட்னாமில் ஆண், பெண், குழந்தை, கிழவன், கிழவி உட்பட அனைவரும் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இருபது இலட்சம் மக்களை அமெரிக்க ஏகாதிபத்தியம் பலிகொண்டபோதிலும் வியட்னாமியரின் காடு, வீட்டு வளங்களை அமெரிக்கர் தீயிட்டுக் கொழுத்தியபோதிலும் வீரம் செறிந்த வியட்னாம் மக்கள் களையாது தீரத்துடன் போராடி விடுதலை பெற்றார்கள். வியட்னாமியரின் பயிர்களைக் கூட அமெரிக்கர்கள் அழித்தார்களாயினும் வியட்னாமியரை அடிபணிய வைக்க முடியவில்லை. வியட்னாம் மக்கள் ஒரு கையில் மண்வெட்டியுடனும், மறு கையில் துப்பாக்கியுடனும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி வெற்றிவாகை சூடினார்கள்.

நாமும் எமது விடுதலைப் போராட்டத்தில் வெற்றிவாகை சூடுவோம். இன்று எமது சகல சக்திகளையும் போராட்டத்தை நோக்கித் திசை திருப்ப வேண்டியுள்ளது. எல்லா வகையிலும் போராட்டத்திற்கு முதன்மை கொடுத்து அனைவரும் அதனை நோக்கிச் செயற்பட வேண்டியுள்ளது. ஒடுக்குமுறைகளை மீறும்போதும், போராட்டம் நிகழும்போதும், பழைய சமூக அமைப்பும், பழைய வாழ்க்கை முறை என்பனவும் குழம்பும். இதில் ஓர் புதிய சூழ்நிலை தோன்றும். இப் புதிய சூழ்நிலையில் புதிய வாழ்க்கை முறையை ஏற்றுக் கொண்டு விடுதலைக்கான தயாரிப்பில் ஈடுபட வேண்டும். புதிய வாழ்க்கை முறையில் சோசலிசத்திற்கான விதைகளை ஊன்றி உறுதியுடன் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். இந்த வகையில் போராட்டத்திற்கேற்ற புதிய பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும். முதலில் உணவுப் பிரச்சனையின் மீது எமது கவனத்தைச் செலுத்தவேண்டும்.

எனவே எதிரி நம்மை தோற்கடிக்க ஓர் ஆயுதமாக உணவை பயன்படுத்துவான். ஆனால் நாம் உணவை ஓர் ஆயுதமாகக் கருதி உணவு உற்பத்திப் போரில் ஈடுபட வேண்டும். போராட்டங்களில் துப்பாக்கி ஏந்துவதற்கு நிகரானதே உணவு உற்பத்தித் துறையில் பங்களிப்பதும். எனவே நாம் ஒவ்வொரு அங்குல நிலத்திலும் உற்பத்தியில் ஈடுபட்டு நம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்போம்.



## சுதந்திரம்

சுதந்திரத்தின் சுடரை ஏற்றி
வருவதற்காக கனத்த
இருளில் அவன் சென்ருன்
திரும்பி வருவேன்
எனக்காகக் காத்திருங்கள் என்ருன்

எங்கே சென்ருன்?
சோகத்தில் கறுத்த
பனைக் கோடுகளுக்குள்—
தத்தளிக்கும் கருநீலக்
கடல் வெளியினூடே—
எத்தனை தடைகளை
அவன் தகர்த்திருப்பான்?
கடுமையான முனைகளில்
எப்படிப் போரிட்டான்?

தெரியவில்லை.

தெரிவதெல்லாம்
சுதந்திரத்தை மீட்டு வருவதாகத்
தந்த உறுதிமொழிகள்...
காத்திருக்கச் சொன்ன நம்பிக்கைகள்...

அவனுக்காகச் சில காலம்
காத்திருப்பேன்.
பிறகு, அவனும் வரவில்லையெனில்
நானே போவேன்.
நானும் திரும்பாவிட்டால்
எனது பையன்களும் போவார்கள்.

—சலில் கங்கோபாத்யாய
எழுதிய வங்காளக் கவிதையைத் தழுவியது.

# மக்கள் யுத்தமும்



கெரில்லா வடிவமான ஆயுதப் போராட்டத்தை மக்கள் யுத்தம் என முதலில் வர்ணித்தவர் மாவோ. வெகுசன அரங்கில், வெகுசனப் பங்களிப்போடு நடத்தப்படும் போர் என்பதால் இப் போராட்டமுறை மக்கள் யுத்தமெனக் கொள்ளப்படுகிறது. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க விடுதலைப் போராட்ட அனுபவங்களை நாம் பரிசீலிக்குமிடத்து கெரில்லாப் போர்முறைத் திட்டத்தின் வெற்றிக்கு மக்களின் பங்களிப்புத்தான் மூலமாக இருந்தது என்பதை அறிந்து கொள்ளலாம். போராட்ட களத்தில் மக்கள் நேரடியாகக் குதிக்கும் பொழுதே கெரில்லா வடிவ ஆயுதப் போராட்டம் மக்கள் யுத்தமாகப் பரிணமிக்கிறது.

கெரில்லாப் போரின் ஆரம்ப கட்டங்களில் மக்கள் வெறும் பார்வையாளர்களாக, அவதானிகளாக மட்டும் இருந்துவருவர். காலப் போக்கில் அவதானிகள் என்ற நிலையிலிருந்து அனுதாபிகளாக, ஆதரவாளர்களாக மக்களின் நிலைப்பாடு மாறுகிறது. ஆனால் இந்த அனுதாபமும் ஆதரவும் நேரடிப் பங்களிப்பாக மாற்றம் கொள்ளும்பொழுதுதான் போராட்டத்தில் ஒரு புதிய திருப்பம் ஏற்படுகிறது; உண்மையான மக்கள் போராட்டம் உதயமாகிறது.

ஆதரவு நல்கும் நிலையிலுள்ள வெகுசனத்தை ஆயுதப் போராட்டத்தில் நேரடிப் பங்குதாரர்களாக மாற்றுவதென்பது இலகுவான காரியமல்ல. இந்தக் கைங்கரியத்தை எந்த ஒரு விடுதலை இயக்கமும் உடனடியாக, எடுத்த எடுப்பில் சாதித்து விட முடியாது. இது நீண்ட கால கடின உழைப்பின் மூலம் படிப்படியாக சாதிக்கவேண்டிய விசயம். இது மக்களின் அரசியல் விழிப்புணர்வை, தேசாபிமானவுணர்வை, தட்டி எழுப்புவதில் தங்கியிருக்கிறது. இங்குதான் ஒரு புரட்சிகர விடுதலைச் சித்தாந்தத்தின் பங்கு முக்கியமாகிறது.

புரட்சிகர சித்தாந்தம் என்பது வெறும் கற்பனாவாதத்திலிருந்து பிறப்பதல்ல. ஏற்கனவே எழுதி வைக்கப்பட்ட தத்துவார்த்த நூல்களிலிருந்து பெறப்படுவதல்ல. புரட்சிகர சித்தாந்தமானது வாழ்வனுபவத்திலிருந்து பிறப்பெடுக்கிறது. வாழ்வோட்டத்தின் நிதர்சனத்திலிருந்து கருக்கொள்கிறது நாளாந்த நடைமுறைப் பிரச்சனைகளிலிருந்து பிரசவம் கொள்கிறது. புரட்சிகர சித்தாந்தமானது புரட்சியின் மையத்திலிருந்து, புரட்சியின் யதார்த்த களத்திலிருந்து பிரவாகமெடுக்கிறது.

உலக விடுதலை இயக்கங்கள் பல மார்க்சிய லெனினியத்தை தமது தத்துவார்த்தவழிகாட்டியாக தழுவிக்கொண்டபோதும் போராட்ட களத்தில் பெறப்பட்ட அனுபவத்தின் அடிப்படையிலேயே தமது புரட்சிகர சித்தாந்தத்தை நெறிப்படுத்திக் கொண்டன. மொசாம்பிக் விடுதலை இயக்கத் தலைவர் சமோரா மாசேல் சொல்கிறார்:

***''செயலில் இருந்தே சிந்தனை தோன்றுகிறது. நாம் ஆரம்பத்தில் மக்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுக்க விழைந்தோம். ஆனால், மக்களே தங்களை விடுவித்துக்கொள்ள வேண்டும் என்பதை பின்புதான் அனுபவ வாயிலாக அறிந்து கொண்டோம். விடுதலைப் போராட்ட களத்தில் நேரடியாகப் பங்களிக்காமல் மக்கள் தங்களை விடுவித்துக் கொள்ள முடியாது என்பதை நாம் உணர்ந்துகொண்டோம். நாம் அனுபவ வாயிலாக நிறையக் கற்றறிந்தோம். நாம் தவறுகள் இழைப்பதுண்டு. ஆனால் அந்தத் தவறுகளிலிருந்து நாம் எம்மைத் திருத்திக்கொண்டோம். நாம் வெற்றிகளும் ஈட்டுவதுண்டு. அந்த வெற்றி அனுபவங்களிலிருந்து எம்மை மேலும் செம்மைப்படுத்திக் கொண்டோம். இவ்விதம் செயற்பாட்டு அனுபவங்களிலிருந்தே எமது விடுதலைச் சித்தாந்தம் பரிணமம் பெற்றது. இவ்விதம் நாம் வரித்துக்கொண்ட எமது புரட்சிகர சித்தாந்தம் ஏற்கனவே வேறொரு சூழ்நிலையில், வேறொரு காலத்தில், வேறொரு இடத்தில் செயற்பாட்டுத் தத்துவமாக நெறிப்படுத்தப் பட்டிருக்கிறது என்பதை நாம் பின்பு அறிய முடிந்தது. அந்தத் தத்துவம்தான் மார்க்சீய - லெனினியம்''***

புரட்சிகர செயற்பாட்டிற்கு ஒரு பொதுவான சித்தாந்த வழிகாட்டியாகவே மார்க்சிய - லெனினியத்தை புரட்சிகர விடுதலை இயக்கங்கள் தழுவிக்கொள்கின்றன. ஆயினும் தமது பிரத்தியேக வரலாற்று சூழ்நிலைக்கேற்ப தமது தனித்துவ யதார்த்த வாழ்வனுபவங்களின் அடிப்படையிலேயே ஒவ்வொரு விடுதலை இயக்கமும் தனது புரட்சிகர சித்தாந்தத்தை உருவாக்கிக்கொள்கிறது.

மார்க்சியம் ஒரு சமூக, வரலாற்று விஞ்ஞானம் என்ற ரீதியில் சமுதாய கட்டமைப்பு பற்றியும், மனித வரலாற்றின் போக்குப் பற்றியும் உலகளாவிய விஞ்ஞான விதிகளை எடுத்தியம்புகிறது. இந்த விஞ்ஞானக் கோட்பாடுகள் சமூகப் புரட்சிவாதிகளுக்கு இன்றியமையாத தத்துவ வழிகாட்டியாக விளங்குகிறது. பொருள் உற்பத்தி வடிவத்தினை நிச்சயிக்கவும் சமூக, வர்க்க முரண்பாடுகளை ஆய்வு செய்யவும், சமுதாயப் புரட்சிக்கான செயற் திட்டத்தை வகிக்கவும் மார்க்சீய சமூகவியல் அடிப்படை அறிவியல் கோட்பாடுகளை தந்துதவுகிறது. ஆயினும், அதே வேளை ஒவ்வொரு புரட்சிகர சூழ்நிலையும் தனித்துவமான விசேட குணாம்சங்களையும், அதற்கேயுரிய சிக்கலான பரிமாணங்களையும் கொண்டிருப்பதை நாம் காணலாம். ஒரு சமூக தத்துவத்தின் பொது விதிகளை மட்டும் கொண்டு ஒரு புரட்சிகர சூழலின் முழுமையை நாம் தரிசித்துக்கொள்வது கடினம். அந்த சூழலில் செயற்பட்டு, அந்த செயற்பாட்டு பரிசோதனை அனுபவங்களின் அடிப்படையில் ஒரு புரட்சிகர கொள்கைத் திட்டத்தை நெறிப்படுத்துவது அவசியமாகிறது. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க புரட்சிகள் இந்த உண்மையைப் பகர்கின்றன. மார்க்சீயத்தை அடிப்படை வழிகாட்டியாக கைக்கொண்டபோதும் ஒவ்வொரு புரட்சியும் அதற்கான சிறப்பு வரலாற்றை, அதற்கான புதிய புரட்சி அனுபவத்தை, அதற்கான புரட்சிகர சித்தாந்தத்தை சிருஷ்டிக்கத் தவறவில்லை.

ஒரு புரட்சிகர சித்தாந்தமானது வெகுஜனத்தின் நடைமுறை வாழ்வை தழுவி நிற்க வேண்டும். மக்களின் அபிலாசைகளை, தேவைகளை, எதிர்பார்ப்புகளை நிறைவெய்தும் இலக்குகளைக் கொண்டிருக்க வேண்டும். மக்களின் வாழ்க்கைப் பிரச்னைகளின் நிதர்சனத்தில் வார்க்கப்படும் சிந்தனைகளே மக்களை கவர்கின்றன. ஒரு புரட்சிகர சித்தாந்தமானது செயலின் மூச்சாக, மக்களை ஈர்க்கும் சக்தியாக, மக்களை இயக்கும் சக்தியாக உருவெடுக்கும்பொழுதே விடுதலைப் போராட்டத்தில் வெகுசனப் பங்களிப்பு சாத்தியமாகிறது. சாதாரண வாழ்க்கை ஓட்டத்திற்குப் புறம்பான, மக்களின் ஜீவாதாரப் பிரச்னைகளை தொட்டு நிற்காத, பூடகமான, புதிரான சிந்தனைகள் மக்களைத் தீண்டப் போவதில்லை. புரட்சி சிந்தனையாளர் கப்ரால் இதுபற்றிக் குறிப்பிடுகையில், **''வெறுமையான கருத்துக்களுக்காகவோ அல்லது யாரோ ஒருவனின் மண்டைக்குள் வெடிக்கும் எண்ணங்களுக்காகவோ மக்கள் ஒருபொழுதும் போராடப் போவதில்லை. மக்கள் வேண்டுவதெல்லாம் உருப்படியான, பயன் தரும் நலன்களையே. தமது வாழ்க்கை நிலை மாறும், மேம்பட்டதாக அமையும் என்பதற்காகவும், தமது வாழ்க்கை நிம்மதியாக கஷ்டமின்றி முன்னேற்றப் பாதையில் செல்லும் என்பதற்காகவும், தமது பிள்ளைகளின் எதிர்காலம் சுபீட்சமாக அமையும் என்பதற்காகவுமே மக்கள் போராட முன் வருவார்கள்'' என்கிறார்.**

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் இன்று மக்கள் யுத்தமாக விஸ்தரிக்கப்படும் புரட்சிகர வரலாற்றுக் காலகட்டத்தை அண்மித்துள்ளது. இதுவரை காலமும் அனுதாபிகளாக, ஆதரவாளர்களாக இருந்துவந்த எமது மக்கள் இனி நேரடிப் பங்குதாரர்களாக மாறும்பொழுதே இந்த மக்கள் யுத்தம் சாத்தியமாகும். ஆனால் புரட்சிகர விழிப்புணர்வு தோன்றாமல் மக்கள் போராளிகளாக மாறப்போவதில்லை. இந்த விழிப்புணர்வை தட்டியெழுப்பக் கூடிய ஒரு புரட்சிகர விடுதலை சித்தாந்தம் எவ்வாறு அமையப் பெற்றிருக்க வேண்டும்?

எமது மக்களின் நிதர்சன வாழ்க்கை நிலைகளைப் பிரதிபலிக்காத, அவர்களது ஜீவாதாரப் பிரச்சனைகளைத் தொட்டு நிற்காத வரண்ட கருத்துக்கள், அந்நிய சிந்தனைகள், புதிரான கோட்பாடுகள் மக்களை ஒருபொழுதும் போராட்ட களத்திற்கு ஈர்க்கப் போவதில்லை. எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளின் சிக்கலான பரிமாணங்களும் அதற்கான வரலாற்றுக் காரணிகளும் தனித்தன்மை வாய்ந்தவை. எமது மக்கள் அந்தக் காலத்து ரஷ்யாவிலோ, சீனாவிலோ, கியூபாவிலோ வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. பழைய மரபு மார்க்சீயவாதிகள் அப்படித்தான் நினைத்தார்கள். அதனால் அந்நிய புரட்சி வடிவங்களையும், அவற்றின் தத்துவார்த்த கோட்பாடுகளையும் அளவுகோலாக வைத்து எமது மக்களின் பிரச்னைகளை அளந்துபார்க்க முனைந்தார்கள். அதனால் மக்களிடமிருந்து அந்நியப்பட்டார்கள். இந்தப் பழைமைவாத மார்க்சீயவாதிகள் சிலர் இன்று விடுதலை இயக்கம்' என்ற போர்வையில் எமது புரட்சிகர சூழ்நிலைக்கு ஒவ்வாத புராதன மார்க்சீயம் கருத்துக்களை விதைத்து வருகிறார்கள். மக்கள் கிரகித்துக்கொள்ள



மொஸாம்பிக் விடுதலைப் போரில் பங்கு பெறும் மக்கள்

## விடுதலையும் கலாச்சாரமும் 3ம் பக்கத்தொடர்ச்சி

யடைந்து பார்த்துகொண்டிருக்கிறது. **"ஆபிரிக்கனின் கரங்களே உலகின் அத்திவாரக் கற்களை நட்டவை"** என்று போற்றப்பட்ட எம்மக்களின் கலாச்சாரம் பெரும் பாரும் பாதகமான சூழ்நிலைகளிலேயே ஜீவித்திருக்கிறது. பாலைவனங்களிலிருந்து பூமத்தியக்காடுகள்வரை, சதுப்பு நிலங்களிலிருந்து அடிக்கடி பெருக்கெடுக்கும் நதிக்கரைகள்வரை எல்லாவித கஷ்டங்களினூடேயும், மரம், மிருகம், மனிதன் யாவரையும் அழிக்கும் கொள்ளை நோய்களினூடேயும் இந்தக் கலாச்சார இயக்கம் வளர்ந்துள்ளது. **பேஸில் டேவிட்ஸன் போன்ற சரித்திர ஆய்வாளர்களின் கருத்தின்படி, "மிகவும் பாதகமான சூழலில் ஆபிரிக்க மனிதன் சாதித்துள்ள அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார வளர்ச்சி மனித சரித்திர சிகரங்களுடன் ஒப்பிடத்தக்க தொன்றாகும்."**

இந்த உண்மை ஆபபிரிக்கனின் விடுதலைக்காகப் போராடுகிறவர்களுக்கு ஊட்டமளிக்கிறது. ஆனால் எந்தக் கலாச்சாரமும் பரிபூரணமானதொன்றல்ல. இருந்தும் கலாச்சாரமும் ஒரு மக்கள் சமூகத்தில் நிகழும் பிரிவுகளைச் சரிசெய்து ஒன்றிணைக்கிற யதார்த்த சக்தி என்பதை மறுக்க முடியாது.

குருட்டுத்தனமான கலாச்சார அணுகுமுறைகள் தீங்கானவை. விமர்சனப் பண்பற்ற தற்புகழ்ச்சி முதலியவை இவை. இதைவிட மனித சமூகத்தின் பொதுச் சொத்தாக ஒரு சிறு பகுதி மனிதர்கள் செய்த சாதனை என்று ஆபிரிக்கக் கலாச்சாரத்தைக் காண்பதே சரியாகும். இன்றைய விடுதலைப் போராட்டத் தேவைகளை முன்னிறுத்தி விமர்சன பூர்வமாக ஆபிரிக்கக் கலாச்சாரத்தைப் பார்ப்பதே முக்கியமாகும். பலவீனங்களைத் தவிர்த்து அவற்றையே உறுதிகளாக மாற்றுவதற்கு இதுவே உதவும்.

உற்பத்தி முறைகளைப் பரிபூரணமாக விடுவித்து பொருளாதார, அரசியல், கலாச்சார முன்னேற்றத்தைச் சாதிப்பதே விடுதலைப் போரின் நோக்கம். இது அரசியல் விடுதலையையும் கடந்த ஒரு அடிப்படை. இந்தப் பின்னணியிலேயே கலாச்சாரத்தை நிறுத்தி தேர்வு முறைக்கு உட்படுத்தி ஆராய்வது அவசியம். ஆயுதப் போருக்காக மக்களை ஒரு அமைப்பினுள் திரட்டி காலனி ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கு இத்தகைய ஆய்வு அவசியமாகிறது.

போராட்டத்தின் அன்றாடத் தேவைகளை மக்கள் சந்திக்கும் விதம் அவர்களது கலாச்சாரப் பண்பினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் என்பது அநுபவம். எனவே விடுதலை இயக்கத்தின் முக்கியத்துவத்தினை கலாச்சாரமே உணர்த்தும் வகையில் கலாச்சார இயக்கம் திரட்சி பெறவேண்டும். **வேற்று மக்களின் போராட்டங்களிலிருந்து விளைந்த உபாயங்களைப் பயன்படுத்துவதாகப் பிரகடனம் செய்வது கனவுலகப் பேச்சாகும். ஏனெனில் அந்த மக்கள் இங்கே உள்ள கலாச்சாரத்தினால் நிர்ணயிக்கப்பட்ட நிலைமைகளைச் சந்தித்தவர்களல்லர்.**

போராட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் **தலைவர்களும் சரி, போராடும் மக்களும் சரி, கலாச்சாரமானது எவ்வளவு தூரம் மக்களின் மனோ சக்திக்குள் வேரூன்றி உள்ளது** என்பதை உணர்வதில்லை. இவற்றை கலாச்சாரம் சாதிக்கும் போதே, உண்மை நிலை பற்றிய தவறான கணிப்புகளையும், கடமையினின்றும் தவறியதையும் புரிந்துகொள்வர். அரசியல், விஞ்ஞான அடிப்படையில் நடக்கும் ஒரு போராட்டத்தில் விளையக்கூடிய திறனின்மைகளையும் கலாச்சாரம் உருவாக்கிவிடும். **ஆனால் விடுதலைப் போரில் நேரும் தடைகளையும், தோல்விகளையும். வேதனைகளையும் தாங்கக்கூடிய சக்தியைத் தருவது கலாச்சாரம்தான்.**

**பெருந் தொகையினரை ஒன்று திரட்டும் ஆயுதப் புரட்சி, சமூகத்தின் கலாச்சார பலவீனங்களைத் தவிர்த்து பலமுள்ள அம்சங்களை ஊக்குவிக்கிறது. பழங்குடிப் பழக்கங்களும் பூர்வீக அனுஷ்டானங்களும் மறைகின்றன. பிதுர் வழிபாடு, உறவினர்க்குத் தரும் சலுகை, சமூகத் தாழ்வுணர்ச்சி, பெண்ணடிமை, பூர்வகுடி வழிபாடு ஆகியவை விடுதலை இயக்கத்தின் அறிவார்ந்த தேசியப் பண்புக்கு உதவாதவை. எனவே விடுதலைப் போராட்டம் என்பது கலாச்சாரத்துக்கு புத்துயிர் கொடுக்கும் போராட்டமாகும்.**


**விடுதலைப்புலிகள்**

ஒரு வருட சந்தா ரூபா. 25.00
(தபால் செலவு உட்பட)

விடுதலைப் புலிகள் பத்திரிகைக்கு சந்தாப் பணம் அனுப்ப விரும்புவோரும் அன்பளிப்பு செய்ய விரும்புவோரும் A. இராஜாராம் என்ற பெயருக்கு காசோலை அல்லது போஸ்டல் ஓடர் மூலம் அனுப்பலாம். பணம் அனுப்பும் அன்பர்களை தமது பெயர், விலாசத்தைத் தெளிவாக எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

A. இராஜாராம்
த. பெ. எண்: 928
அடையாறு
சென்னை-600020


தமிழ் மக்களுக்கெதிராக நடாத்தப்படும் சிங்கள இனவாத அரசின் இனக்கொலை நடவடிக்கையைக் கண்டித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இலண்டன் கிளை நடத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்.



# புரட்சிகர சித்தாந்தமும்

முடியாத, மக்களுக்கு அநாவசியமான, அரூபமான, அந்நிய கருத்துக்களை மக்களுக்கு திணித்து விட்டால் மக்கள் புரட்சிவாதிகளாக மாறிவிடுவார்கள் என்று எண்ணுகிறார்கள் போலும்.

எமது மக்கள் வாழும் உலகம் வேறு. அவர்களது சமூக நிதர்சனம் வேறு. அவர்களது வரலாற்றுச் சூழ்நிலைகள் வேறு. நாம் எமது மக்கள் வாழும் உலகத்தில் பிரவேசிக்கவேண்டும். அந்த நிதர்சனத்தை நேரடியாக கிரகித்துக்கொள்ள வேண்டும். அதன் வரலாற்று ஓட்டத்தை கண்டுகொள்ள வேண்டும். இந்த முழுமையான தரிசனத்திலிருந்துதான், அந்தப் புரட்சிகரப் பிரக்ஞையிலிருந்துதான் நாம் எமது விடுதலைப் பாதையை நெறிப்படுத்த முடியும். ஒரு புரட்சிகர சித்தாந்தத்தை சிருஷ்டிக்க முடியும்.

அரச பயங்கரவாத பூகம்பத்தால் எமது சமூகக் கட்டுமானம் ஆட்டம்காண ஆரம்பித்திருக்கிறது. சமூகப் பிரச்சினைகள் சிக்கலடைந்து முரண்பாடுகள் கூர்மையடைந்துள்ளன. எமது மக்களின் சாதாரண வாழ்க்கைப் பிரச்சினைகள் ஜீவமரணப்போராட்டமாக பேருருவம் பெற்றுள்ளது. முழு சமுதாயமுமே ஒரு சொந்தளிப்பான நெருக்கடியான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. இன்னொரு விதத்தில் சொல்லப் போனால் எமது சமூகத்தில் புரட்சிகரப் போருக்கான புறநிலைகள் முற்றிவருகின்றன. இந்தப் புரட்சிகரமான வரலாற்றுக் காலகட்டத்தில் நிற்கும் எமது மக்கள் ஒரு புரட்சிகர விடுதலைப் போரில், அதுவும் ஆயுதம் தரித்த போராட்டத்தில் நேரடிப் பங்குகொள்ளும் தயார் நிலையில் இருக்கிறார்களா? அப்படி இல்லாத பட்சத்தில் அவர்களைத் தயார் நிலைப்படுத்துவது எங்ஙனம்.


மக்கள் விடுதலையை விரும்புகிறார்கள். தேசிய ரீதியில், இன ரீதியில் அடக்குமுறை தாண்டவமாடுவதால் முழுத் தேசிய இனத்தின் ஒட்டுமொத்தமான, ஏகோபித்த விழைச்சலாக இந்த சுதந்திர தாகம் பிறக்கிறது. ஆனால் இந்த விடுதலையை வென்றெடுப்பது எப்படி? இந்த விடுதலை எப்படியாக அமைய வேண்டும்? இந்த விடுதலையின் தன்மை எப்படியாக இருக்க வேண்டும்? என்ற விசயத்தில் மக்களிடையே வேறுபட்ட அபிலாசைகளும் கண்ணோட்டங்களும் இருப்பதைக் காணலாம். இந்த வேறுபட்ட பார்வைகளுக்கும் அபிலாசைகளுக்கும் வர்க்க, சாதிய நலன்களே பிரதான காரணிகளாக விளங்குகின்றன. இந்தக் குழப்பத்திலிருந்து மக்களை விடுவித்து, அவர்களது சுயநல அபிலாசைகளுக்கு மேலான பொதுநல சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களின் விடுதலை எழுச்சியை புரட்சிகரப் போராட்டப் பாதையில் இட்டுச் செல்வதற்கு ஒரு புரட்சிகர சித்தாந்தத்தின் பங்கு முக்கியமாகிறது.

பல நூற்றாண்டுகால அந்நிய காலனித்துவ ஆதிக்கத்தால் ஊறிய அடிமைத்தனமும் அதைத் தொடர்ந்து சிங்கள அரச அடக்குமுறையால ஊட்டப்பட்ட பயங்களும் எமது மக்களிடையே போர் உணர்ச்சியை மழுங்கச் செய்தன. ஆயினும் அண்மைக்காலத்தில் எழுந்த ஆயுத எதிர்ப்பியக்கம் புதிய பரம்பரையை போர்க்குணம் கொள்ளச் செய்தது. இளைஞரின் ஆயுத எதிர்ப்பியக்கத்திற்கு மக்கள் ஆதரவு நல்கியபோதும் போராட்டத்தில் தமது பங்களிப்பின் முக்கியத்துவம்பற்றி அவர்கள் உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை. ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்து, விடுதலையை வென்றெடுப்பது இளைஞரின் பொறுப்பு, இயக்கங்களின் பொறுப்பு என்ற எதிர்பார்ப்பில் தமது பங்களிப்பிலிருந்து, தமது தேசிய கடமையிலிருந்து மக்கள் விலகிநின்றனர். விடுதலை என்பது சுற்றவர்கள் பெற்றுத்தரும் விவகாரம் என்ற ரீதியில் மக்களிடையே தவறான கருத்தோட்டம் வலுப்பெற்றது. இந்தப் போலி நம்பிக்கை விதைக்கப்பட்டதற்கு எமது பழைய பாராளுமன்ற பிற்போக்குத் தலைமையும் காரணமாக இருந்தது. இந்திய உதவிக்கு இவர்கள் மண்டியிட்டு மக்களின் சுயநம்பிக்கையைக் கொன்றனர்.

விடுதலையின் அர்த்தமென்ன, விடுதலையின் பயனாய் சமூக மாற்றத்தால் கிட்டும் அளப்பரிய பயன்களென்ன என்ற ரீதியில் மக்களுக்கு விழிப்புணர்வும் தெளிவும் ஏற்படாத பட்சத்தில் அவர்களை அமைப்புரீதியாக அணிதிரட்டி போராட்ட களத்தில் இயக்குவது இலகுவான காரியமல்ல. வெறும் அரசியல் சுதந்திரத்தைக் குறித்து நிற்கும் தமிழீழ கோசத்தை எழுப்பிவந்தால்மட்டும் சமூகத்தின் அடித்தளத்திலிருந்து சதா நசுக்கப்பட்டு சுரண்டப்படும் உழைக்கும் மக்களை விடுதலைப் போராளிகளாக மாற்றிவிட முடியாது. தமிழீழ தனியரசை அமைத்து அரசியல் சுதந்திரம் பெறுவதை உயர்சாதி, மேற்தட்டு வர்க்கப் பிரிவினர் விரும்பலாம். இப்படியான குறுகிய, வரையறுக்கப்பட்ட விடுதலையானது இவ்வர்க்கப் பிரிவினரின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்வதாக அமையும். தமது அரசியல் அதிகாரத்தை நிலைநாட்டவும், பொருளாதார ஆதிக்கத்தை வலுப்பெறச்செய்யவும், சாதிய சுரண்டலை நீடிக்கவும் இவ்வகையான விடுதலை இவர்களுக்கு வாய்ப்பை அளிக்கும். இம்மாதிரியான அரசியற் சுதந்திரம் இவ்வர்க்கப் பிரிவினரின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யலாம் என்றாலும் இவர்கள் இந்த இலட்சியத்தை அடைவதற்கு போர்க்களத்தில் குதிக்கப்போவதில்லை. ஏனெனில் இவர்கள் போராடும் புரட்சிகரவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். இவர்கள் தம்மை ஆளும் வர்க்கம் எனக் கருதுபவர்கள் மற்றவர்கள் போராடி விடுதலையை அடைய வேண்டும் தாம் ஆளவேண்டும் என எண்ணுபவர்கள்.

உழைக்கும் பாட்டாளிவர்க்கமே புரட்சிகர வர்க்கம். சமூகத்தின் கீழ்மட்டத்திலிருந்து திணறிக் கொண்டிருக்கும் இந்த ஏழைப் பாட்டாளிகளின் அபிலாசைகளோ வேறு. இவர்களது நாளாந்த வாழ்க்கையில் எது வித மாற்றத்தையும் விளைவிக்காத அரச அதிகார மாற்றங்களில் இவர்களுக்கு அக்கறை இருக்கப்போவதில்லை. இவர்கள் நாடும் விடுதலை வேறு. இந்த விடுதலையானது அரசியற் சுதந்திரத்தோடு நில்லாது. சமூகப் பொருளாதார வாழ்க்கை நிலைகளிலும் புரட்சிகரமான அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தி உழைக்கும் மக்களின் விடிவுக்கு வழிகோலும் பரந்த இலட்சியங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். இந்த விடுதலை முழு மனித விடுதலையைக் குறித்து நிற்கவேண்டும். சுரண்டல், ஒடுக்குதல் போன்ற சமூக அநீதிகளால் விலங்கிடப்பட்டுக் கிடக்கும் சாதாரண மனிதன், உழைக்கும் மனிதன், இந்தப் புறநிலை அழுத்தங்களிலிருந்து பூரணமாக சுதந்திரம் பெறுவதே உண்மையான, முழுமையான விடுதலையைக் குறிக்கும். இப்படியான **முழு மனித விடுதலையைத் தழுவிநிற்கும் புரட்சிகர விடுதலை இலட்சியமே பரந்துபட்ட வெகுசனத்தை கவரும்.**

# வீர வணக்கம்



விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் ஒரு வீர காவியம் படைக்கப்படுகிறது. கொக்கிளாய் இராணுவ முகாம். காட்டின் நடுவே ஒரு கற்கோட்டை. சுற்றிலும் முள்வேலிகள். மண்மூட்டை அரண்கள். பாதுகாப்பு அகழிகள். நிலக்கண்ணிப் பொறிகள். இயந்திரத் துப்பாக்கி பொருத்திய பாதுகாப்புக் கோபுரங்கள். இத்தனைக்கும் மத்தியில் இளம் புலிகள் களம் குதிக்கின்றனர். பயங்கரச் சண்டை மூள்கிறது. அஞ்சா நெஞ்சம் படைத்த எமது வீரர்கள் மூர்க்கத்துடன் முன்னேறித் தாக்குகின்றனர். எதிரியின் பாதுகாப்பு அரண்கள் நொறுங்குகின்றன. எதிரிப் படை சிதறடிக்கப்படுகிறது. எஞ்சியோர் பின்வாங்கி ஓட்டம் பிடிக்கின்றனர். ஒரு பெரிய போர்ச் சாதனை நிலைநாட்டப்படுகிறது.


இந்த வீர காவியத்தைப் படைத்து களத்தில் பலியான தியாகிகளே ! உங்கள் வீரத்திற்கும் தியாகத்திற்கும் எமது வீர வணக்கத்தை செலுத்துகிறோம்.

















மேலேயிருந்து இடம் வலமாக

**கனகரத்தினம் ரஞ்சன்**
(சைமன்) பொத்துவில்

**குணசிங்கராசா துவாரகன்**
(மயூரன்)

**பொன்னையா சந்திரகுமார்**
(காந்தரூபன்) மட்டக்களப்பு

**கதிரவேலு செல்வராசா**
(மகான்) கம்பர்மலை

**நமச்சிவாயம் தருமராசா**
(ரவி) செம்மலை

**சண்முகராஜா பிரபாகரன்**
(ஜெகன், இடிஅமீன்) திருகோணமலை

**சதாசிவம் அன்ரனி**
(சொனி) சாவகச்சேரி

**பொன்னையா சண்முகநாதன்**
(ரஞ்சன், மாமா) கண்டாவளை

**தியாகராஜா வரேந்திரன்**
(தனபாலன்) பரந்தன்

**துரைசாமி சிறீமுருகன்**
(காந்தான்) சாவகச்சேரி

**கனகசபை செல்வராசா**
(கெனடி) மட்டக்களப்பு

**முதுங்கொடுவ உடுகம கேமசிறி**
(பழுக, வின்சன்ற்) பருத்தித்துறை


**கந்தையா ஜெயந்தன்**
(நிமால்) பருத்தித்துறை

**பாலசுந்தரம் பாலகணேசன்**
(சங்கரி) வல்வெட்டித்துறை

**கனகு இராசநாயகம்**
(வேதா, சிவா) கண்டாவளை

**கந்தையா பர[illegible]வரன்**
(காந்தி, பாலன்) தம்பலகாமம்









சிதறிய உனது ரத்தம்
பிறந்த மண்ணில் சிந்தியதும் சுடரானது
ஆயிரமாயிரம் மனங்களில் கனன்றது
பற்றியெறிந்து பனையதிர மனல் சிதற
வெளியெங்கும் வெடித்தெழுகிறது பெருந்தீ
தீ கனிந்து சூரியனுகி விடியும்
உன் தாகம் மலர்களாய் சிரிக்க
கனவுகள் உயிர்த்துப் பறவைகளாகும்

